# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 7 வியாழக்கிழமை (23-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:270


# பொலீஸ் அனுமதியின்றிக் கொழும்பில் இன்று பேரணிக்கு ஐ.தே.கட்சி தயார்!

## தடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லையாம்

கொழும்பு,ஓகஸ்ட்23

**அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கோரியும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் அனுசரணையில் இயங்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மக்கள் கூட்டமைப்பு, இன்று தலைநகர் கொழும்பில் பேரணிகளுக்கும் பொதுக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்திருக்கின்றது.**

**இந்த எதிர்ப்பு இயக்கத்தை நடத்தாமல் தடுப்பதற்கு எந்தவித நோக்கமும் கிடையாது என்று கூறும் அரசாங்கம் ஆனால் ஐ.தே.க. இதுவரை இந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு பொலீஸ் அனுமதி பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.**

இன்று மருதானை, பேர்றளை,, பௌத்தலோக மாவத்தை போன்ற இடங்களில் கூடும் எதிரணி ஆதரவாளர்கள் பேரணியாக நகர மண்டப மைதானத்தை வந்தடைவர். அங்கு எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும்.

இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் , தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி மற்றும் மனோகணேசன் ஆகியோர் உரையாற்றுவர் என அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால்

## தேசிய பாதுகாப்புக் கருதி பேரணியைத் தவிருங்கள்!

### அரசாங்கம் கோரிக்கை

கொழும்பு,ஓக.23

கொழும்பில் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால் தேசிய பாதுகாப்புக்கருதி ஊர்வலங்களையும், பேரணிகளையும் தவிருங்கள்.

- இவ்வாறு அரசாங்கம் கோரியிருக்கின்றது.

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி இன்று நடத்தவிருக்கும் எதிர்ப்பு இயக்கத்தை ஒட்டி,தனது செய்தி ஊடகங்கள் மூலம் நேற்று அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சுவரொட்டிகள், ஐ.தே.கட்சி சார்

(12ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய் பலியானதாக அறிவிப்பு

வவுனியா,ஓக.23

பதவியாக்குளத்துக்கும், பராக்கிரமபுரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக்காலைத ாம் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் -

அவரிடமிருந்து ஏ.கே.எல்.எம்.ஜி. உட்பட ஒரு தொகுதி ஆயுதங்களைத தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ம-7)

### அமைச்சரவை கூட்டத்தில் முக்கியமான சிலர் இல்லை

கொழும்பு,ஓக.23

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கிய அமைச்சர்கள் சிலர் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, எஸ்.பி.திஸநாயக்கா, ஜி.எல்.பீரிஸ், மஹிந்த விஜயசேகர ஆகியோரே சமுகமளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

நேற்றைய கூட்டத்துக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி அரைமணி நேரமே அங்கு இருந்ததாகவும் -

அவர் சென்ற பின்னர் பிரதமர் தலைமையிலேயே கூட்டம் நடைபெற்றதாகவும் - கூறப்பட்டது. (ம)

### பொ.ஐ.மு. பட்டியலில் போட்டியிட்ட

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைக்குத் தடை

கொழும்பு,ஓக.23

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட்டு தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவருக்கு எதிராக பொ.ஐ.முன்னணி ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

எம்.பிக்களான ஏ.எஸ்.அதாவுல்லா, எம்.எச்.தௌபீக், எம்.சின்னலெப்பை ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையின் கீழ் செயற்படுகின்றனர்.

இந்த மூவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதற்காக பொ.ஐ.முன்னணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு இன்று கூடவிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிராக குறிப்பிடப்படும் குற்றங்கள்

கொழும்பு,ஓக.23

அடுத்த மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான குற்றப் பிரேரணையை ஐ.தே.கட்சி தயாரித்துள்ளது.

அந்தப் பிரேரணையில் ஜனாதிபதிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வருமாறு:-

★ பிரதி நிதியமைச்சர் மற்றும் அமைச்சரவைக்குத் தெரியாமல் இலங்கை நாணயமான ரூபாவை மிதக்க விட்டமை.

★ நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் - பிரேரணை சமர்ப்பிக்காமல் - சர்வதேச நாணயநிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அடிப்படை உரிமை மீறல் தொடர்பான திவ்வியனின் மனு விசாரணைக்கு ஏற்பு!

கொழும்பு,ஓக.23

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளரும், பல்கலைக்கழக மாணவனுமான கிருஷ்ணசாமி திவ்வியன் மற்றும் அவரது கைதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சங்கர் ஆகியோரின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்றத்தின் முன்னால் இந்த மனுக்கள் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள், சட்டமா.அதிபர் மற்றும் மனுக்களில் எதிர் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண விசேட செயலணி

### பிரதமர் தலைமையில் அமைக்கப்பட்டது

கொழும்பு,ஓக.23

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் நோக்குடன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையில் விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த செயலணியை அமைப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் செயலணியில் பாதுகாப்பு அமைச்சு, கடற்றொழில் - நீரியல் வள அமைச்சு, துறைமுகங்கள், தென்பகுதி அபிவிருத்தித் துறை அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் பொது வசதித்துறை அமைச்சு, வெளிவிவகாரத்துறை அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் அங்கம் வகிப்பர்.

செயலணி அவ்வப்போது கூடி நாட்டின் அரசியல் நெருக்கடிகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகள் குறித்து முடிவு எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் செயலணியினர் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர். (ம-7)

### தேசிய நல்லிணக்க அரசு அமைக்கும் யோசனை

## அரசின் அழைப்பை ஏற்க ஐ.தே.கட்சி நிபந்தனை!

கொழும்பு,ஓக.23

தேசிய நல்லிணக்க அரசு குறித்துப் பேசவருமாறு பிரதமர் விடுத்த அழைப்பை ஏற்பதற்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி நான்கு நிபந்தனைகளை விதிக்கவிருப்பதாக அறியவருகின்றது.

இந்த அழைப்புக் குறித்து ஐ.தே. கட்சி நேற்று ஏனைய எதிர்க்கட்சிகளுடன் விரிவான ஆலோசனைகளை நடத்தியது.

அதனைத் தொடர்ந்து இது விடயத்தில் ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் பதிலை அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமருக்கு இன்று அனுப்பி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தப் பதிலில் -

★ ஜனாதிபதி முன்வைத்துள்ள சர்வஜன வாக்கெடுப்பை உடனடியாக ரத்துச்செய்ய வேண்டும்.

★ நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட இணங்கவேண்டும்.

★ ஐந்து விடயங்கள் தொடர்பான சுதந்திர ஆணைக்குழுக்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ் மீது திருமலையில் நேற்றுக் கிளைமோர் தாக்குதல்

### எட்டுப் பொதுமக்கள் காயம்

திருகோணமலை,ஓக.23

திருகோணமலை - இறக்கக்கண்டி வீதியில் நிலாவெளிப் பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று நேற்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதில் 8பொதுமக்கள் காயமடைந்தனர்.

திருகோணமலையில் இருந்து இறக்கக்கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் 6ஆம், 7ஆம் மைல் கல்களுக்கு இடைப்பட்ட பகுதியில் நண்பகல் 12.45 மணியளவில் கிளைமோர் தாக்குதலுக்கு, இலக்கானது.

காயமடைந்தவர்கள் நிலாவெளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தில் பஸ்ஸில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்பக் கல்லூரியால் வெளியேறிய மாணவரைக் கொண்டு

# மேலதிக மாகாண கல்வித் திணைக்கள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## நேர்முகப்பரீட்சை 27ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.23

மேலதிக மகாணக் கல்வித் திணைக்களத்தில் உள்ள ஆளணி வெற்றிடத்தை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை உடன் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சித் திணைக்களத்தின் வலயம் 4 (வடக்கு - கிழக்கு) பிராந்திய உப பணிமனையில் நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு.பரமேஸ்வரன் இதற்கான அனுமதியை வழங்கி உள்ளார்.

மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உள்ள கணனி இயக்குநர்கள், தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர்கள், எழுதுநர்கள் ஆகியோருக்கு உள்ள வெற்றிடங்களே நிரப்பப்பட உள்ளன. இந்த வெற்றிடங்கள் அனைத்தும் 1999 - 2000 ஆண்டுகளில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய மாணவர்களை மட்டும் கொண்டே நிரப்பப்பட உள்ளன.

தகுதியான மாணவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், தொழில்நுட்பக் கல்லூரிப் பயிற்சியில் சித்தி அடைந்தமைக்கான சான்றிதழ், ஏனைய கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, நற்சான்றிதழ் கள், என்பனவற்றுடன் 27ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வருமாறு தொழில்நுட்ப கல்வி பயிற்சித் திணைக்கள பிராந்திய உப பணிமனை, வலயம் 4 (வடக்கு - கிழக்கு) பிரதி பிராந்திய பணிப்பாளர் ந.யோகராஜன் அறிவித்துள்ளார். (ம)

# நீதிமன்ற கைதிகள் 'செல்'லுக்குள் கசிப்பு வைத்திருந்தவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் கைதிகளைத் தடுத்து வைக்கும் 'செல்'லுக்குள் கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கைதி ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த 15ஆம் திகதி நீதிவான் நீதிமன்ற 'செல்'லுக்குள் இருந்ததாகக் கூறி ஆயிரத்து 300 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டப் பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராசா நிகால் டன்ஸ்ரன் என்ற கைதிக்கே கசிப்பு வைத்திருந்தமைக்கான தண்டனை விதிக்கப்பட்டது.

விசாரணையின் போது தான் கசிப்பு வைத்திருந்ததை குற்றவாளி நீதிவான் முன்பாக ஒப்புக்கொண்டதுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தன்னிடம் கேட்டதனாலேயே தான் அதனை வாங்கி வைத்திருந்ததாகவும் கூறினார்.

இதனை அடுத்து குற்றவாளி 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டதுடன் திருநெல்வேலி ஊனமுற்றோர் நிலையத்துக்கு ஆயிரம் ரூபா தர்மப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீதான விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதி நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

## யாழ்.மாவட்டத்தில்

# பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் 80 பேருக்கு விரைவில் நியமனம்

வடமராட்சி கிழக்கு,ஓக.23

யாழ்.மாவட்டத்திலுள்ள 7 பிரதேச செயலர் பிரிவுகளில் 80 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களுக்கேற்ப இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலர் பிரிவில் 6 கலை, 2 விஞ்ஞானம், 1 வர்த்தகம், 1 நுண்கலை பட்டதாரி பயிலுநர்களும் -

வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் பிரிவில் 4 கலை, 2 விஞ்ஞானம், 1 வர்த்தகம், 1 நுண்கலை பட்டதாரி பயிலுநர்களும் -

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலர் பிரிவில் 7 கலை, 1 விஞ்ஞானம், 1 வர்த்தகம், 1 நுண்கலை பட்டதாரி பயிலுநர்களும் -

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 9 கலை, 1 விஞ்ஞானம், 1 நுண்கலை பட்டதாரி பயிலுநர்களும் -

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 7 கலை, 2 விஞ்ஞானம், 2 வர்த்தகம், பட்டதாரி பயிலுநர்களும் -

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 11 கலை, 4விஞ்ஞானம், பட்டதாரி பயிலுநர்களும் -

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 11 கலை, 2விஞ்ஞானம், 2 வர்த்தகம் பட்டதாரி பயிலுநர்களும் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளை பிரதேச செயலர் பிரிவிலும் 7 கலை, 3 விஞ்ஞானம், 1 நுண்கலை பட்டதாரிப் பயிலுநர் தெரிவுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. (க-182)

## கூட்டணி அலுவலகத்தில் கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை முதல்வர் ந.ரவிராஜ், தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சிவமகாராசா ஆகியோர் 'இன்றைய அரசியல் சூழ்நிலை' பற்றி உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## தமிழ்பெண் கோணேஸ்வரி மீதான

# பாலியல் வல்லுறவு, படுகொலை நினைவு நாளிலேயே தாக்குதல்!

## அம்பாறைச் சம்பவம் குறித்து அறிக்கை

மட்டக்களப்பு,ஓக.23

அம்பாறை மத்திய முகாமில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் கோணேஸ்வரியின் 4ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையிலேயே மத்திய முகாம் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

1997 ஓகஸ்ட் 21ஆம் திகதியே கோணேஸ்வரி படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

பிரதான பொலீஸ் நிலையமும் அதனோடு இணைந்த இரண்டு மினி முகாம்களும் தாக்கியழிக்கப்பட்டதாகவும், இதில் 40க்கும் மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் இருவர் களப்பலியானதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

12 மணிக்கு தாக்குதல் ஆரம்பித்து 15 நிமிடங்களில் பொலீஸ் நிலையம் வீழ்ந்ததாகவும் அதிகாலை வரை பொலீஸ் நிலையத்திலிருந்து எடுக்கக்கூடிய பொருள்களை, ஆயுதங்களை எடுத்துவிட்டு 10க்கும் மேற்பட்ட வாகனங்களைத் தாங்கள் தீக்கிரையாக்கியததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். (உ)

## மேலும் இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.23

தும்பளை இலட்சுமணன் பகுதியில் இடம்பெற்ற இரு பகுதியினருக்கிடையிலான சண்டையில் காயமடைந்த மேலும் இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் தங்கியுள்ள நாகர் கோயிலைச் சேர்ந்த எஸ். திருச்செல்வம் (வயது 35), நாகநாதன் கிருகதர்சினி (வயது 15) ஆகிய இருவருமே அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இச்சண்டையில் காயமடைந்த வேலுப்பிள்ளை கண்மணி (வயது 43) அவரது மகனான கண்மணி கேதீஸ்வரன் (வயது22) ஆகியோர் கடந்த திங்கட்கிழமை இரவு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

# குடாநாட்டிலிருந்து சர்வமதக் குழு அடுத்த மாதம் தென்பகுதிக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.மாவட்டத்திலிருந்து சர்வமதக் குருமார்கள் குழுவொன்று அடுத்த மாத நடுப்பகுதியில் தென் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளது.

இன விவகார தேசிய நல்லிணக்க ஒருமைப்பாடு அமைச்சின் அழைப்பின் பேரில் இந்தக் குழுவினர் கடந்த மாதம் 26ஆம் திகதி தென்னிலங்கைக்கு செல்லத் திட்டமிட்டிருந்தனர்.

தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகளால் இவர்களது பயணம் அப்போது ரத்துச் செய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட சர்வமத குருமார்களை தென்பகுதிக்கு அழைக்க இன விவகார தேசிய நல்லிணக்க ஒருமைப்பாடு அமைச்சு மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் யாழ்.செயலகத்துக்கு அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சர்வமத குருமார் குழுவை தென்பகுதிக்கு அழைத்துச் செல்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் -

அடுத்த மாத நடுப் பகுதியில் இவர்கள் தென் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் - யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6)




கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 79ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் சங்க மகளிர் குழுத் தலைவி திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் உரையாற்றுவதையும் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை, யாழ்.மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, சங்க முன்னாள் உப தலைவர் செ.சதானந்தம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-117)



சைவப்புலவர் வ.கந்தசாமிக்கு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அண்மையில் 'சைவ பூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்தது. வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவின் போது சங்க உறுப்பினர்கள் நல்லை ஆதீன முதல்வருடன் எடுத்துக் கொண்ட படம். (ஐ)

# வங்கிக் கிளை மூடப்பட்டமை: விளக்கம் தருகின்றது நிர்வாகம்

யாழ்ப்பாணம்,ஓக.23

"வங்கிக் கிளை மூடப்பட்டதால் வாடிக்கையாளர் சிரமம்" என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் 9ஆம் பக்கத்தில் வெளியான செய்தி ஒன்று குறித்து இலங்கை வங்கியின் யாழ்ப்பாணப் பிரதேச முகாமையாளர் பதில் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி நேற்றைய செய்தியில் "வாரத்தில் இரு தினங்கள் பருத்தித்துறையில் இயங்கிவந்த சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை எதுவித அறிவித்தலுமின்றி மூடப்பட்டுள்ளதால் தென்மராட்சிப் பிரதேச வங்கி வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்" - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு பிரதேச முகாமையாளர் அளித்துள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி செய்தி எமது வங்கியின் நடவடிக்கைகளில் எமது வங்கி வாடிக்கையாளர்களுக்கு அதிருப்தி ஏற்படும் வண்ணம் பிரசுரிக்கப்பட்டிருப்பது கண்டு மனம் வருந்துகிறோம்.

பூரணமான தகவல்களைப் பெற்ற பின் இச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருப்பின் சாலச் சிறந்ததாக அமைந்திருக்கும்.

எமது சாவகச்சேரி வங்கிக் கிளை மே மாதம் 2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்பு 2000ஆம் ஆண்டு ஒக்ரோபரிலிருந்து யாழ்நகரிலுள்ள எமது இலங்கை வங்கி பிராந்திய அலுவலகத்தில் தனது முழுமையான வங்கிச் சேவையினை வழங்கிக்கொண்டிருப்பதைத் தங்கள் பத்திரிகை வாயிலாகவே ஏற்கனவே அறியத் தந்துள்ளோம். இருப்பினும் பல இடங்களிலும் இடம்பெயர்ந்திருந்த எமது வாடிக்கையாளர்கள் நலன்கருதி மானிப்பாய், பருத்தித்துறை போன்ற இடங்களில் தற்காலிகமாக விசேட கருமபீடங்களை அமைத்திருந்தோம். காலக்கிரமத்தில் மானிப்பாயில் போதியளவு வாடிக்கையாளர்களின் தேவை ஏற்படாமையால் அக்கருமபீடத்தை மூடியுள்ளோம். அவ்வாறே பருத்தித்துறையிலும் இவ்வித நிலைமை ஏற்பட்டமையால் மாற்று நடவடிக்கைகள் மூலம் எமது வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளரின் அனுசரணையுடன் வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள எமது வாடிக்கையாளர்கள் வாரத்தின் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாள்களில் மட்டுமல்லாது வாரத்தின் எல்லா வேலை நாள்களிலும் எமது வங்கி நடவடிக்கையை எமது பருத்தித்துறைக் கிளை மூலமாக பெற்றுக்கொள்ளக் கூடியதற்கான ஏற்ற நடவடிக்கைகளைச் செய்துள்ளோம். ஆயினும் ஓய்வூதியம் வழங்கப்படும் வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களும் வழமைபோல் எமது விசேட கருமபீடம் அதே இடத்திலேயே செயற்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.


- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு:-*

1. இடம்பெயர்ந்த நிலையிலும் சாவகச்சேரி வங்கிக் கிளையின் சேவையை, சிறப்பாக வழங்கி வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கும் வங்கி நிர்வாகம் பாராட்டுக்குரியது. வடமராட்சியில் தங்கியுள்ள இக்கிளையின் வாடிக்கையாளர்களின் நலன்கருதி, வார நாள்கள் அனைத்திலும் பருத்தித்துறைக் கிளையில் உரிய சேவையைப் பெற ஏற்பாடு செய்திருப்பதும் வரவேற்கத்தக்க - சிறப்பான - நடவடிக்கை.

2. எனினும் நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் "எதுவித அறிவித்தலுமின்றி மூடப்பட்டுள்ளதால்" என்று தெரிவிக்கப்பட்டிருப்பதை வங்கி நிர்வாகத்துக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வேலை நேரத்துக்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே வங்கியை மூடுவதானாலும் கூட கொழும்பில், அரச செய்திப் பத்திரிகைகளுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் விளம்பரம் செய்யும் இலங்கை வங்கியின் தலைமையகம், குடாநாட்டில் இடம்பெயர்ந்த நிலையிலும் பல கோடி ரூபாவுக்கு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் - முதலீடுகளைச் செய்யும் - குடாநாட்டு வாடிக்கையாளர்களோடு நல்ல வர்த்தக உறவுகளைப் பேணுவதற்காக, இத்தகைய விடயங்கள் குறித்து ஓரிரு ஆயிரம் ரூபா செலவில் அறிவித்தல் விளம்பரங்களை உள்ளூர்ப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு தடை விதிக்க முனையாது என்பதையும் பிராந்திய நிர்வாகிகளுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். (ஆர்)



உக்ரைனில் கடந்த திங்கட்கிழமை நிலக்கரிச் சுரங்கமொன்றில் 'காஸ்' விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பினால் உருவான தீயில் கருகி 36 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்த விபத்தில் காப்பாற்றப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படுவதையும் அங்கு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதையும் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் ஒரே இடத்தில் புதைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

### 'ஜிகாத்' புனிதப் போர் நடத்துவதற்கு

# தீவிரவாதிகள் நிதி சேகரிப்பதற்கு பாகிஸ்தானிய மாகாணத்தில் தடை

இஸ்லாமாபாத்,ஒக.23

'ஜிகாத்' எனப்படும் புனித யுத்தத்துக்காக தீவிரவாத அமைப்புகள் நிதி சேகரிப்பதற்கு பாகிஸ்தானின் சிந்து மாகாண நிர்வாகம் தடை விதித்துள்ளது.

தென் பகுதியில் அமைந்துள்ள சிந்து மாகாணத்தில் தீவிரவாதிகள் நிதி சேகரிப்பதற்கு நேற்றுமுன்தினம் முதல் தடைவிதிக்கப்பட்டது.

நிதி சேகரிப்பில் ஈடுபடும் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

காஷ்மீர்த் தீவிரவாதிகள் உட்பட சகல தீவிரவாத அமைப்புகளுக்கும் இந்தத் தடை உத்தரவு பொருந்தும் என்றும் -

மாகாண நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வாறான தடை உத்தரவு காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நடவடிக்கையாக அமைந்திருப்பதாக காஷ்மீர்த் தீவிரவாதக் குழுக்கள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஒரு அரங்கில்

பாகிஸ்தானில் இஸ்லாமிய இனப் பிரிவுகளிடையே நிலவும் பகை உணர்வு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படக் காரணமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

காஷ்மீர் தீவிரவாத அமைப்புகளில் பெரும்பான்மையாக உள்ளவர்களும், சிந்து மாகாணத்தில் பெரும்பான்மையாக உள்ளவர்களும், வெவ்வேறு இஸ்லாமியப் பிரிவினர்கள் என்பதால் இந்தத் தடை உத்தரவுக்கு சிந்து மாகாணத்தில் எதிர்ப்பு உருவாகாது என்று நம்பப்படுகிறது. (ஒ-9)

### ஆசிய கிரிக்கெட் போட்டிக்காக

# இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மத்திய அரசு அனுமதி மறுத்தது

புதுடில்லி,ஒக.23

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 'ஆசிய டெஸ்ட் சம்பியன்ஷிப்' கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இந்தியக் கிரிக்கெட் அணிக்கு மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடந்த பாதுகாப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

'ஆசிய டெஸ்ட் சம்பியன்ஷிப்' போட்டியில் இந்தியக் கிரிக்கெட் அணி கலந்துகொள்வதை உறுதிப்படுத்த ஆசிய கிரிக்கெட் சபை இன்று வரை அவகாசம் வழங்கியிருந்தது.

இந்த நிலையில் உள்துறை அமைச்சர் அத்வானி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உமா பாரதி, வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோர் பிரதமர் தலைமையில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியை பாகிஸ்தான் செல்ல அனுமதிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த முடிவுக்கான காரணங்கள் எதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆக்ரா உச்சி மாநாட்டில் பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் கலந்து கொண்டதையடுத்து பாகிஸ்தானுக்கு இந்திய கிரிக்கெட் அணி செல்ல அனுமதி கிடைக்குமென நம்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### டொலரின் மதிப்பு மீண்டும் குறைந்தது

வாஷிங்ரன்,ஒக.23

இந்த ஆண்டில் ஏழாவது தடவையாக அமெரிக்க டொலரின் மதிப்பு குறைந்துள்ளது.

பல பெரிய அமெரிக்க நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கானோர் வேலையிழந்திருப்பதையடுத்து, இந்த நிலை உலகின் இதர பகுதிகளிலும் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்துவதைத் தடுக்க அமெரிக்க அரசின் மத்திய வங்கி தனது அடிப்படை வட்டி விகிதத்தை 25 சத வீதமாகக் குறைத்துள்ளது.

மந்தமான அமெரிக்கப் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட வட்டி விகிதக் குறைப்பால் அமெரிக்க டொலரின் மதிப்பு குறைந்துள்ளது.

### பெரு நாடாளுமன்றத்தின் முன்பாக

# அவல நிலையை வெளிப்படுத்த ஒரு விதையைத் துண்டித்த நபர்

### முன்னர் ஆணுறுப்பை வெட்டியவராம்

லீமா,ஒக.23

தனது அவல நிலையை வெளிப்படுத்துவதற்காக, பெரு நாட்டு நாடாளுமன்றத்தின் முன்னால், கடந்த செவ்வாய்க்கிழமை தனது விதைகளில் ஒன்றைத் தானே துண்டித்துக் கொண்ட நபர் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தான் வேலையில்லாமல் கஷ்டப்படுவதைத் தெரிவிக்க இதே நபர் கடந்த ஆண்டு தனது ஆணுறுப்பை பொது இடத்தில் வைத்து துண்டித்துக் கொண்டவராவார்.

தற்போது மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுவரும் 36 வயதான எடுவார்டோ வெரிஸ் என்ற அந்த நபர் தனது அவல நிலையை வெளிப்படுத்தி நிவாரணம் பெறவே இவ்வாறு செய்ததாக மருத்துவர்களிடம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் வேலை கோரி நாடாளுமன்றத் தலைவரைச் சந்திக்க வெரிஸ் செய்த முயற்சி தோல்வியடைந்ததால் தனது ஆணுறுப்பை துண்டித்ததாகவும் -

ஆனால் அதிர்ஷ்டவசமாக வெட்டப்பட்ட ஆணுறுப்பை மருத்துவர்கள் வெற்றிகரமாகப் பொருத்திவிட்டதாகவும் - கூறப்படுகிறது.

இப்போதும் நாடாளுமன்ற வாசலில் சபைத் தலைவரைச் சந்திக்க வேண்டும் என்று வெரிஸ் குரல் எழுப்பியபோதும், அது உதாசீனப்படுத்தப்பட்டதால், கூரான கத்தியால் தனது விதைகளில் ஒன்றைத் துண்டித்துக் கொண்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த முறை வெரிஸ"க்கு ஆணுறுப்பைப் பொருத்திய டாக்டர் கார்லோஸ் என்பவரே இந்த முறையும் அவருக்கு சிகிச்சையளிக்கிறார்.

ஒரு விதையை இழந்தாலும் சகஜமான பாலியல் உறவில் வெரிஸ் ஈடுபட முடியும் என்று டாக்டர் கார்லோஸ் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### அ.தி.மு.க. ஆட்சியின் நூறு நாள்கள்

சென்னை,ஒக.23

தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி பதவியேற்று நேற்றுடன் நூறு நாள்கள் ஆனது. இதையொட்டி ஜெயலலிதா விடுத்த அறிக்கையொன்றில் தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக மாற்றத் தனது அரசு பாடுபடுமெனத் தெரிவித்துள்ளார்.

# பீஹாரில் 300 பேர் கைது!

பாட்னா,ஒக.23

இந்தியாவின் கிழக்கு மாநிலமான பீஹாரில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆதரவாளர்கள் சுமார் 300 பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சிகள் நடத்திய ஹர்த்தால் போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஆறாம் திகதி பீஹாரில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்தச சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை கோரியும், எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்றுமுன்தினம் ஹர்த்தால் நடத்தப்பட்டது.

அப்போது தலைநகர் பாட்னாவில் வாகனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் மாநிலத்தில் ஆளும் ராஷ்டிரிய ஜனதாதள் கட்சியின் முக்கிய பிரமுகர்களின் வீடுகள் ஆகியவை மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்தே எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

# மேற்காசிய நெருக்கடி குறித்து சீனாவுக்கு அரபாத் விளக்கம்

காஸா,ஒக.23

மேற்காசிய நெருக்கடிகள் தொடர்பாக சீனத் தலைவர்களுக்கு பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் விளக்கமளித்தார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அரபாத், அதிபர் ஜியாங் ஜெமின் உட்பட சீனத் தலைவர்களிடம் பலஸ்தீனத் தரப்பினரின் நியாயங்களை எடுத்துரைத்தார்.

இதற்கிடையில் ஜெர்மன் வெளிவிவகார அமைச்சரை அரபாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் தனித்தனியே முன்னர் சந்தித்து உரையாடியதன் பலனாக, இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தலைவர்களிடையே சந்திப்பு ஒன்று இடம்பெற சாத்தியம் உருவாகியுள்ளதாகக் கருதப்படுகிறது.

தலைவர்கள் மட்டச் சந்திப்புக்கு முன்னதாக பேர்லினில் வைத்து இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிமோன் பெரஸுடன் பேச்சு நடத்தத் தான் தயாராக உள்ளதாக அரபாத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுக்கான திகதிகள் எதனையும் அவர் குறிப்பிடவில்லை.

ஆயினும் இந்தச சந்திப்பு அடுத்த வாரம் இடம்பெறக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

# பாஸ்மதி அரிசி காப்புரிமை விடயத்தில் தோற்கவில்லை என்கின்றது இந்தியா

புதுடில்லி,ஒக.23

பாஸ்மதி அரிசி ரகத்துக்கு காப்புரிமை பெறும் விவகாரத்தில் இந்தியா தோல்வியடையவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பாஸ்மதி அரிசியின் மேம்படுத்தப்பட்ட 3 ரகங்களுக்கு மட்டுமே காப்புரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இதனால் இந்தியாவின் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி பாதிக்கப்படப்போவதில்லை என்றும் -

இந்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான இந்தியாவின் ஆட்சேபனைகளை அமெரிக்கக் காப்புரிமை அலுவலகம் ஏற்றுக் கொண்டிருப்பதாலேயே பாஸ்மதி அரிசியின் 3 ரகங்களுக்கு மட்டும், 'ரைஸ்டெக்' நிறுவனத்துக்கு காப்புரிமை வழங்கப்பட்டிருப்பதாக இந்திய அரசு கருதுவதாகவும் கூறப்பட்டது.

பாஸ்மதி அரசிக்கு ஏகபோகக் காப்புரிமை வழங்கும்படி அமெரிக்காவின் 'ரைஸ்டெக்' கூட்டுத்தாபனம் கோரியதை அமெரிக்க காப்புரிமை அலுவலகம் நிராகரித்திருப்பது இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவே என்றும் மத்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேசமயம், பாஸ்மதி அரிசிக்கான காப்புரிமை தொடர்பான மத்திய அரசின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவரும் இந்திய எதிர்க்கட்சிகள், இந்த விடயத்தில் இந்திய விவசாயிகள் பாதிக்கப்படுவதை அரசு தவிர்க்கத் தவறிவிட்டதாகக் கண்டித்துள்ளன.

இதற்கிடையில், விளைபொருள்களுக்கு வழங்கப்படும் காப்புரிமைகள் தொடர்பாக புவியியல் அறிகுறிச் சட்டம் ஒன்றை உருவாக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு தெரிவித்தது. (ஒ-9)

# பங்களாதேஷ் சிறைகளில் இடநெருக்கடி அதிகரிப்பு

டாக்கா,ஒக.23

பங்களாதேஷ் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதால் கடும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் அதேசமயம், சமீபகாலமாக அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் எதிர்பாராத அளவில் கூடி வருவதாகவும் -

ஆனால் அதற்கேற்றவாறு சிறைச்சாலைகளில் இடவசதிகள் விரிவாக்கப்படவில்லை என்றும் -

பங்களாதேஷ் உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

பங்களாதேஷில் கடந்த சில மாதங்களில் மட்டும் அரசியல் வன்முறைகளில் 70பேர் கொல்லப்பட்டனர்.

அரசியல் வன்முறைகளில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 58 ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டனர். (ஒ-9)

# இந்திய எம்.பிக்களின் சம்பளத்தை உயர்த்த கம்யூனிஸ்ட்டுகள் எதிர்ப்பு

புதுடில்லி,ஒக.23

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் அதிகரிக்க வழி செய்யும் பிரேரணையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் தவிர்ந்த மற்றைய கட்சிகள் வரவேற்றுள்ளன.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் -

இதுவரை 4 ஆயிரம் ரூபாவாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பளம் 12 ஆயிரமாக உயரும் -

நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நாளுக்காக கொடுப்பனவு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாவாக உயர்த்தப்படும்.

அத்துடன், உத்தியோகபூர்வ இல்லத்தின் மின்சார கட்டணமாக 50 ஆயிரம் ரூபாவும், தொலைபேசிக் கட்டணமாக ஒரு லட்சம் ரூபாவும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஒருவருட காலத்துக்கு ஒதுக்கப்படும். (ஒ-9)

### ஆந்திராவில் விவசாயிகளின் பணம் மோசடி

ஹைதராபாத்,ஒக.23

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், ஹைதராபாத் ஊரக வளர்ச்சி வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த சுமார் 32 கோடி ரூபாவை மோசடி செய்ததாக அந்த வங்கியின் தலைவர் உட்பட வங்கி அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் முதலீடு செய்த பணத்தைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவான அந்த வங்கி அதிகாரிகளை தேடும் பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

## துறைமுகத்தையும் புலிகள் தாக்கும் அச்சுறுத்தல்

# நெருக்கடியான நிலை ஏற்பட்டால் இந்திய உதவியைக் கோருவோம்

## செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா

கொழும்பு, ஓக. 23

''நெருக்கடியான ஒருநிலை ஏற்பட்டால் இந்திய அரசிடம்நாம் உதவி கோருவோம்'' என்று வெகுஜன ஊடக அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்தியச் செய்தியாளர் ஒருவர் —

விடுதலைப் புலிகளிடம் 30 மைல்களுக்கு அப்பால் இருந்து தாக்கக்கூடிய சக்தியுள்ள ஆயுதங்கள் உள்ளனவே. 30 மைல்களுக்கு அப்பால் இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்தும் கூட புலிகள் கொழும்பு துறைமுகத்தைத் தாக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய உதவிகள் கேட்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச விமானநிலையம், துறைமுகங்கள் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் தாக்காத வகையில் அதைத் தடுப்பதற்கு வெளிநாடுகளின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்கப்பட்டதை அடுத்து புலிகள் இயக்கத்திற்கு எதிராக அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு இணக்கங்களும் காணப்பட்டுள்ளன: நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

நாம் புலிகள் இயக்கத்திடம் மண்டியிடவில்லை. நாம் இரக்கமற்ற கெரில்லாப்படையுடன் போராடுகின்றோம் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன —

என்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அண்மையில் பி. பி. ஸிக்கு அளித்துள்ள பேட்டி குறித்தும் அமைச்சர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

### நிதி அமைச்சுச் செயலாளர்

நிதி அமைச்சின் செயலாளர்பி.பி. ஜெயசுந்தர செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:-

கட்டுநாயக்கா விமான படைத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பலவிடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதித் துறையும், உல்லாசப் பயணத்துறையும் கடும் பாதிப்பை எதிர்கொண்டன.

எனினும், விமான நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி சேவைகளை வழமையான நிலைமைக்கு கொண்டுவரும் முயற்சிகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டதன் காரணமாக, 24 மணித்தியாலயத்தில் மீண்டும் வேலைகளை ஆரம்பிக்க முடிந்தது. எனினும், குறுகிய கால அளவில் பல பாதிப்புகள் ஏற்பட்டது. உல்லாசப் பயணத்துறை கடும் நெருக்கடியை எதிர்கொண்டது.

அரசாங்கம் நிலைமை மேலும் மோசமடைவதைத் தவிர்ப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது. சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

கொழும்புத் துறைமுகத்தின் நடவடிக்கைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதே எமது முக்கிய நோக்கமாகவிருந்தது. இந்த முயற்சிகள் ஓரளவு வெற்றியளித்துள்ளன.

(க-3)

# ஆளணி வசதி இன்றி இயங்கும் யாழ். தொழில் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்தில் நீண்டகாலமாக தொழில் அதிகாரிகள் பற்றாக்குறை நிலவுவதாக தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் 10 இற்கும் மேற்பட்ட தொழில் அதிகாரிகள் கடமையாற்றிய யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்தில் தற்போது இரண்டு அதிகாரிகளே பணிபுரிவதாகவும்—

முன்னரைவிட தற்போது வேலைகள் அதிகரித்திருப்பதனால் அந்த இரண்டு அதிகாரிகளும் பெருமளவு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்—

அவர் கூறினார்.

இந்த அலுவலகத்தில் லிகிதர்கள், சிற்றூழியர்கள், தட்டெழுத்தாளர்கள் ஆகியோருக்கும் நீண்டகாலமாகப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

''எமது தொழில் திணைக்களத்துக்கு இதுவரை 'பக்ஸ்', போட்டோஸ்ரட், றோணியோ இயந்திரங்களோ கணனி வசதிகளோ செய்து தரப்படவில்லை.

''அது மட்டுமன்றித் தற்போது யாழ்ப்பாணத் தொழில் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சேதமடைந்த பழைய கதிரை, மேசைகளில் இருந்தே தமது கடமைகளைச் செய்து வருகின்றார்கள்.

''இந்தக் குறைபாடுகளையெல்லாம் தொழில் அமைச்சுக்கும், கொழும்பிலுள்ள தலைமைக்காரியாலயத்துக்கும் பலதடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.''

— இப்படி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 23

இந்த வருடம் நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கான தேசிய பாசறையில் முதலாமிடம் பெற்று சிறந்த மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மத்திய மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய பாசறைக் குழுவினர் சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பாராட்டு விழா ஈ. பி. டி. பியினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை 9.30 மணிக்கு வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். தேசிய பாசறையில் கலந்துகொண்ட வீர வீராங்கனைகளுக்கு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

(ம-4)

## முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி

தொண்டமனாறு கெருடாவில் அம்பிகை சிக்கன கூட்டுறவுச் சங்க முன்பள்ளி மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் இ. குணசேகரம் தலைமையில் நடைபெறும்.

இப் போட்டிக்கு பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(க-173)

## நாகர் கோயிலில் சிப்பாய் காயம்

நாகர்கோயில் முன்னணி நிலைகள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

காயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-3)

## சந்நிதி ஊடாக பஸ் சேவை நடத்த கோரிக்கை

தொண்டமனாறு சந்நிதி ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி வடமராட்சிக்குத் தினமும் அனைத்துப் பாதைகள் ஊடாகவும் நடைபெறும் பஸ் சேவைகள் அனைத்தையும் சந்நிதி ஊடாக நடத்த ஆவன செய்யவேண்டும் என பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-173)

## இணுவில் இந்துவில் அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் தெற்கு, ஓக.23

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் பதவிக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் சேவைதரத்தைச் சேர்ந்த விருப்பமானவர்கள் உரியவிண்ணப்பப்படிவத்தில், உரிய முறைப்படி பூரணப்படுத்தி செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்பாக வலிகாமம் கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-152)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம், திருநெல்வேலி அருள்மிகு கேணியடி ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அலங்கார உற்சவம் முடிவுற்ற மறுநாள்— 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை — காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு வைரவர் மடையும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் மாகேஸ்வர பூசையும் நடைபெறும். (ம)

* * *

மானிப்பாய், ஓக. 23

கைதடி —இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ம-7-90)

* * *

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-72)

★ ★ ★

பிரான்பற்று முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும். 2 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. உற்சவத்தை முன்னிட்டு உற்சவ நாள்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படும். (ஐ-135)

★ ★ ★

வட்டு. கிழக்கு சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ புனலை வைரவர் ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா இன்று வியாழக்கிழமை காலை 7.21 மணி தொடக்கம் 8.50 மணிவரை வரும் உத்திராட நட்ஷத்திா கன்னி லக்கின சுபமுகூர்த்த நல் வேளையில் நடைபெறும்.

(ஐ-133)

★ ★ ★

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை கேடகத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும் ஆலயத்தில் தொடர் தெய்வீக பேருரைகளை ''சிவத் தமிழ் சொல்லழகர்'' ச. லலீசன் நிகழ்த்தி வருகிறார்.

இந்தப் பேருரையின் அடிப்படையில் மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டியும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

(க-72)

* ★ *

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மணவாளக் கோல விழா நடைபெறும்.

(க-86)

★ ★ ★

ஆனைக்கோட்டை புளியங்கண்டுப் பிள்ளையார் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.15 மணி முதல் 9.25 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். தொடர்ந்து 12 நாள்கள் அபிஷேகம் இடம்பெற்று அடுத்த மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தான விஷு வருஷ ஆவணி மகோற்சவ பெருவிழா நாளை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும் இத்திருவிழா நிகழ்வுகளில் அடுத்த மாதம் 9ஆம் திகதிதேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். தீர்த்தம் திருவடி நிலையில் நடைபெறும். இவ்வாலய கும்பாபிஷேகம் இன்று நடைபெறும் என்றும் தேவஸ்தான பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ம-15)

★ ★ ★

வட்டு.கிழக்குசித்தன்கேணி கேணியடி சித்திவிநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.35 மணி முதல் 9 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

(ஐ-133)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சர்வமங்கள ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்குச் சங்காபிஷேகம், விசேட பூசைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

சிவத்திரு. வ. குமாரசாமி ஐயாவின் சமயச்சொற்பொழிவு பகல் 11 மணிக்கு இடம்பெறுவதைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (க-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 23

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க-15)

★ ★ ★

வண்ணார்பண்ணை பிறவுண்வீதி பத்திரகாளி அம்மன் சாந்திக மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் வரை நடைபெறும்.

அடுத்த மாதம் 6 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும். மறுநாள் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மணவாளக்கோல உற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவுறும்.

(க-173)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 23

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன. (ம-7)

## தாச்சிப் போட்டி

வலி. வடக்கு, ஓக. 23

யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழகம் மோதும். (ம-86)

## உதயன்

### காலம் தாழ்த்திய ஊழல் குற்றச்சாட்டு

"வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம்; கால்பட்டால் குற்றம்" - என்பார்கள்.

தனது முன்னாள் நம்பிக்கைக்குரிய சகாவும், சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் இந்த அடிப்படையிலானவையாகக் கூட இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

கடந்த ஏழு ஆண்டுகளாக - தான் முதன் முதலில் பிரதமரான காலந்தொட்டு - நிதி அமைச்சர் பதவியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே வைத்திருக்கின்றார்.

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் தமது அரசு மீண்டும் ஆட்சிக் கட்டில் ஏறியபோது நிதி அமைச்சுக்கு தமக்கு உதவியாக ஒன்றுக்கு இரண்டு பிரதி நிதி அமைச்சர்களை நியமித்தார் ஜனாதிபதி. அவர்களில் ஒருவர்தான் இந்த எஸ்.பி.திஸநாயக்க.

கடந்த தேர்தலின் பின்னர் காலம் தாழ்த்தித்தான் பிரதி அமைச்சர்கள் நியமனங்கள் செய்யப்பட்டன. ஆனால் அதற்குள்ளும் முந்திக் கொண்டு வழங்கப்பட்ட பிரதி நிதி அமைச்சர் நியமனம் எஸ்.பி.திஸநாயக்கவினுடையது.

அதாவது கடந்த பொதுத் தேர்தலுக்கு முந்திய தனது அரசில் சமுர்த்தி, விளையாட்டுத்துறை, நாடாளுமன்ற விவகார அமைச்சராக இருந்த எஸ்.பி.திஸநாயக்கவின், நாணய - நிதி விவகாரங்களில் பெரு நம்பிக்கை வைத்து அவருக்கு பிரதி நிதி அமைச்சர் பதவியை முந்திக் கொண்டு வழங்கியிருந்தார் ஜனாதிபதி. இந்தப் பிரதி நிதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது 2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில்தான்.

ஆனால் இப்போது 1998, 99ஆம் ஆண்டுகளில் அமைச்சர் திஸநாயக்கவின் கண்காணிப்பின் கீழ் சமுர்த்தி நிதி தவறாகக் கையாளப்பட்டிருப்பதான குற்றச்சாட்டுக்களை அவருக்கு எதிராக அடுக்குகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

தன்னுடையதும், நிதி அமைச்சினதும், மத்திய வங்கியினதும் எதிர்ப்புக்களையும் மீறி சமுர்த்தி நிதி தவறான முறையில் முதலீடு செய்யப்பட்டதாகவும் -

சமுர்த்தி பயனாளிகளுக்கு 1998, 99ஆம் ஆண்டுக்குரிய வட்டி உரிய முறையில் வழங்கப்படவில்லை எனவும் -

அமைச்சர் மீது குற்றம் சுமத்துகின்றார் ஜனாதிபதி.

இந்த அமைச்சர் ஊழல் குற்றம் புரியவில்லை என்று வக்காலத்து வாங்குவதல்ல எமது நோக்கம்.

1998, 99ஆம் ஆண்டுகளில் இழைக்கப்பட்ட நிதிக் குற்றங்களுக்கு -

அதனைக் கண்காணித்து, குற்றங்களை - தவறுகளை - அவ்வப்போதே கண்டுபிடித்து, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டிய நிதி அமைச்சர் பதவியை தனது பொறுப்பில் வைத்திருந்த ஜனாதிபதி -

அந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்காமல் -

அதற்குப் பதிலாக கடந்த ஆண்டில் அந்த நபருக்கு பிரதி நிதி அமைச்சர் பதவி வழங்கி மேலும் ஊழலுக்கு வழிசெய்துவிட்டு -

இப்போது அந்த நபர் அரசியலில் தமக்கு ஒத்துழைக்காத நிலைப்பாடு எடுக்கும்போது, பழைய விடயங்களைக் கிளறி 'ஊழல்' என்று கூக்குரலிடுவது என்ன வகையில் நியாயம்?

ஒரு வகையில் பார்த்தால் அவர் இப்போது கூறும் ஊழல் பேர்வழிகள், ஊழல் புரிந்தது பற்றிய தகவல்கள் தமக்குத் தெரிந்திருந்தும், அவர்கள் மேலும் ஊழல் புரிய வசதியாக பிரதி நிதி அமைச்சர் பதவிக்கு நியமித்ததன் மூலம் ஊழலுக்கு ஜனாதிபதியும் பொறுப்பாக - உடந்தையாக - இருந்திருக்கின்றார் என்று கூறலாம் அல்லவா?

எனவே சட்டி, பானையைப் பார்த்து கறுப்பு என்ற கதை போலத்தான் இந்த ஊழல் குற்றச்சாட்டு இருக்கின்றது.

இந்த 'பம்மாத்து'க்கு எல்லாம் இலங்கை மக்கள் ஏடுபடுவார்களா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# போக்குவரத்துப் பொலீஸாரின் பணிக்கு போதிய வாகன வசதிகள் இல்லை

## பொறுப்பதிகாரி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

போக்குவரத்துப் பொலீஸார் யாழ்நகரில் தமது கடமைகளைச் சீராக மேற்கொள்வதற்கு போதிய வாகன வசதிகள் இல்லை என்று போக்குவரத்து பொலீஸ் பொறுப்பதிகாரி குடாஹெட்டி கவலை தெரிவித்தார்.

அவர் மேலும், கூறியதாவது:-

ஆரம்பத்தில் எம்மிடம் 4 மோட்டார் சைக்கிள்கள் இருந்தன. ஆனால் தற்போது ஒரே ஒரு மோட்டார் சைக்கிள் மட்டுமே உள்ளது. வேறு வாகனங்கள் எதுவும் எம்மிடம் இல்லை.

நகரப் பகுதியில் ஒரு விபத்து நடந்தால் கூட இந்த மோட்டார் சைக்கிளில்தான் நாம் போய்வருகிறோம்.

போதிய வாகன வசதியிருந்தால்; எமது பணியை மேலும் சிறப்பாகச் செய்ய முடியும் என்றும் குடாஹெட்டி மேலும் குறிப்பிட்டார்.(க-6)

## நாட்டு நடப்பு

### நுளம்பும் மனையாளும்

படுத்திருக்க மெள்ள பக்குவமாய் கிட்ட வரும்
அடுத்து இன்னிசையை அது எழுப்பும் - உருக்கமாய்
தொட்டுத் தடவித் தூங்கவிடாது வைத்திருக்கும்
கெட்ட நுளம்பும் கெடுதியில்லா மனையாளும் ஒன்றே அறி.

- *விகடகவி.*

# 16 கோடி ரூபா சமுர்த்தி நிதி 3 சதவீத வட்டிக்கு எந்த வங்கியிலும் வைப்பிலிடப்படவில்லை

## அமைச்சர் திஸநாயக்கவின் நீண்ட அறிக்கையில் விவரிப்பு

கொழும்பு,ஓக.23

மூன்று சதவீத வட்டிக்கு 16 கோடி ரூபா சமுர்த்தி நிதி எந்த வங்கியிலும் வைப்பில் இடப்படவில்லை. ஜனாதிபதி கூறியது போன்று எதுவும் வைப்பில் இடப்படவும் இல்லை.

இப்படிக் கூறியுள்ளார் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க.

கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட நீண்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் அமைந்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமுர்த்தி நிதி தனியார் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தால் அது கூடுதலான வட்டியை எதிர்பார்த்தே ஆகும். அரசாங்க வங்கிகளில் வட்டி குறைவானால் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உண்டு.

சமுர்த்தி நிதியம் இப்பொழுது இலங்கை வங்கியிலும் மக்கள் வங்கியிலும் வைப்பீடுகளாகவும், திறைசேரி உண்டியல்களாகவும் சுமார் 700 கோடி ரூபாவைக் கொண்டுள்ளது. இவற்றுக்கு 10 முதல் 12 சதவீத வட்டி கிடைத்து வருகிறது. சமீபத்திய வைப்புகளுக்கு 15 முதல் 16 சத வீத வட்டியும் கிடைத்துவருகிறது. இவற்றுக்கு மேலதிகமாக மக்கள் வங்கியின் இணைப்பு நிதி நிறுவன மாகிய பீப்பில்ஸ் லீசிங் கம்பனியில் 200 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதற்கு 17 முதல் 28 சதவீத வட்டியும் கிடைத்து வருகிறது.

இலங்கை வங்கியின் இணைவு நிறுவனமாகிய மேர்ச்சன்ட் கிரேடிற் நிறுவனத்தில் 200 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 17 முதல் 28 சதவீத வட்டியும் கிடைத்து வருகிறது. பான் ஏசியா வங்கியில் 200 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டிருக்கிறது. இதற்கு 18.5 சதவீத வட்டி கிடைக்கிறது.

### தனியார் வங்கிகளில் சுமார் 4 சதவீதம் வைப்பில்

இதற்கு மேலதிகமாக சமுர்த்தி இயக்கத்தில் முழுவைப்புத் தொகையில் சுமார் 4 சதவீதம் வரை தனியார் வங்கிகளிலும் வைப்பிலிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கூடுதல் வட்டியை பெறும் நோக்கமேயாகும்.

சணச வங்கியிலும் 50 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டிருக்கின்றது. இதற்கு 18.5 சதவீத வட்டி கிடைக்கிறது.

இந்தத் தனியார் வங்கி வைப்புகள் தொடர்பான ஜனாதிபதியின் கூற்று தனியார் வங்கிகளில் பங்குகளை வாங்கி அவற்றுக்கு சொந்தக்காரர்களாவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் சம்பந்தமானதாகும். அதனால் பங்குகளை விலைக்கு வாங்குவதையும் பணத்தை வைப்பிலிடுவதையும் அவர் ஒன்றாகக் குழப்பியுள்ளது போல் தெரிகிறது.

சமுர்த்தி இயக்கம் வர்த்தக வங்கி ஒன்றுக்கு உரிமையாளராவது அல்லது அதன் பங்குதாரராவது சமுர்த்தி இலட்சியத்தின் ஒருபகுதியாகும்.

பங்களாதேஷில் உள்ள கிராமின் என்ற வங்கி இயக்கம் வர்த்தக வங்கி ஒன்றைச் சொந்தமாகக் கொண்டுள்ளது. இந்தக் கிராமின் சமுர்த்தி இயக்கம் வறுமை ஒழிப்புக்கு பாடுபடும் இயக்கமாகும். இந்தக் கிராமிய இயக்கம் வர்த்தக வங்கி ஒன்றைச் சொந்தமாகக் கொண்டுள்ளது. இதனால், சமுர்த்தி இயக்குநரும் வங்கி ஒன்றின் சொந்தக்காரராகவும் அல்லது பங்குதாரராக அந்த இயக்கத்தின் தவிர்ந்த கொள்கைத் தீர்மானத்தின் வெளிப்பாடாகும் என்று நான் மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இதுபற்றி ஜனாதிபதியும், நிதி அமைச்சின் உயரதிகாரிகளும் நன்கு அறிந்தே இருந்தனர்.

சமுர்த்தி இயக்கம் தனியார் வங்கி ஒன்றின் பங்குகளை விலைக்கு வாங்கியது 25-04-2000 தேதி அன்றாகும். இதற்கு ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே இது குறித்து ஆழமான கலந்துரையாடல்கள் சமுர்த்தி இயக்கத்தினுள் இடம் பெற்றன. காலத்துக்குக் காலம் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளோடு எமது அதிகாரிகள் கருத்துப் பறிமாறியும் உள்ளனர்.

இது குறித்து மத்திய வங்கி நிதி அமைச்சு, நாணய சபை பிரதிநிதிகளுக்கு நன்கு தெரியும். இவர்கள் சமுர்த்தி இயக்கத்தினருடன் தொடர்ந்து உரையாடியும் வந்துள்ளனர். தனியார் வங்கியின் பங்குக் கொள்வனவுக்கு இந்த அதிகாரிகளினதும் நாணய சபையினதும் அனுமதி கிடைத்தது. இது தொடர்பில் இந்த அதிகாரிகள் ஜனாதிபதிக்குத் தகவல் வழங்காமல் இருப்பது கவலைக்குரியதொன்றாகும்.

957 சமுர்த்தி வங்கிகள் இது வரை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து பெரிய அல்லது நடுத்தர வர்த்தகர்களுக்கு கடன் கொடுக்கப்படவில்லை. இவ்வாறான விசாரணைகளும் வெளிப்படுத்தல்களும் திடீரென்று குறிப்பிட்ட சில அமைச்சுகளுக்கு எதிராக மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட காரணம் ஒன்றும் இரகசியமானதல்ல - என்று குறிப்பிட்டுள்ளார்.

(க-3)

### மஹோற்சவம் இம்முறையும் இல்லை

யாழ்ப்பாணம்,ஓக.23

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இம்முறையும் நடைபெறவில்லை.

இடப்பெயர்வினால் மக்கள் வேறு இடங்களில் தங்கியுள்ளமையால் மஹோற்சவத்தை நடத்த முடியாதிருப்பதாக ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். இன்று முதல் எதிர்வரும் மூதலாம் திகதிவரை மஹோற்சவ தினங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-10)

### ஆரையம்பதியில் குடும்பஸ்தர் மீது படையினர் சூடு!

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செ.சுந்தரசீலன் (26 வயது) என்பவரே அதிரடிப்படை முகாமுக்கு அருகில் வைதது் சூட்டுக்கு இலக்கானார்.

இவர் காத்தான்குடி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

(க-21)

### பஸ் விபத்தில் 8 பயணிகள் காயம்

வவுனியா,ஓக்.23

வவுனியாவில் இருந்து அனுராதபுரம் நோக்கி நேற்றுமுன்தினம் காலை சென்ற போக்குவரத்து சபை பஸ் ஒன்று புனாவை கடற்படைத் தளம் அருகே தடம்புரண்டதில் எட்டுப் பயணிகள் காயம் அடைந்தனர்.

அவர்களில் 7பேர் மதவாச்சி ஆஸ்பத்திரியிலும் மற்றவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-3)

### நாளை

ஆவணி 8
வெள்ளிக்கிழமை
திதி: ஷஷ்டி
முன் இரவு 8.4? வரை
நட்சத்திரம் : சுவாதி
பின்னிரவு : 10.08 வரை
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 6.05 - 7.35
ராகுகாலம் : 10.3? - 12.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன் காரியத்திற்காக அன்பு செலுத்துபவன் நன்றிபெற அருகதையற்றவன்.

## சாயி சிந்தனை

### எப்படி உணவோ அப்படியே மனம்!

மனிதன் உணவுப் பழக்கங்களில் கவனமாக இருக்க வேண்டும். இறைவனின் பக்தன் என்று சொல்லிக் கொள்பவன் மாமிசம் சாப்பிடுவதை அறவே நிறுத்த வேண்டும். காரணம் என்ன? இந்த மாமிசம் மிருக குணத்தை வளர்க்கிறது.

மாமிசம் உண்ணும் புலி, சிங்கம் எந்நேரமும் அமைதியின்றி அலைகிறது. தாவர உணவை உண்ணும் பசு, மான், யானை அமைதியாகக் காணப்படுகின்றன.

எப்படி உணவோ அப்படியே மனம்.

மாம்பழத்தைச் சாப்பிட்டால், ஏப்பமும் மாம்பழத்தைச் சார்ந்தே இருககும்! ஆகையால் முதலில் மாமிசத்தை நிறுத்தவேண்டும். அது மட்டுமல்ல! மாமிசம் சாப்பிடுவதற்காக, நீ ஒரு மிருகத்தைக் கொல்வது எத்தனை பாவம்?

பஞ்சபூதங்களால் நிறைந்த மனிதன், அதே பஞ்ச பூதங்களாலான மிருகத்தைவதை செய்வது என்ன நியாயம்? இவ்வாறு செய்வதால் உங்களுக்குக் கவலைதான் மிஞ்சுகிறது.


ஆகையால் உண்மையான பக்தர்களே மாமிச உணவை விலக்குங்கள்.

நான் சாயி பக்தன், ராம பக்தன், கிருஷ்ண பக்தன் என்று சொல்லிக் கொண்டு "சிக்கன்" சாப்பிடுகிறார்கள்! நீ எப்படிப் பக்தனாக முடியும்? உனக்கு எப்படிக் கடவுள் அருள் கிடைக்கும். அதனால் வெளிநாட்டவரானாலும் சரி உள்நாட்டவரானாலும் சரி உடனே மாமிச உணவு உண்பதை நிறுத்த வேண்டும். இரண்டாவது; நாம் தண்ணீர்குடிக்கின்றோம்; இதில்பிராண சக்தி இருக்கிறது; தண்ணீர் இறைவனின் அம்சம் அதை விட்டு போத்தல்களில் வரும் மதுபானங்களைக் குடிப்பது மகாபாவம்! உன் மனித குணம் மறைந்து போகும்.

இத்துடன் நிற்காமல் சிகரெட்டையும் சிலர் பயன்படுத்துகிறார்கள். உண்மையான பக்தர்கள் மாமிசம் உண்பது, குடிப்பது, புகைப்பது போன்ற செயல்களை விட்டுவிட வேண்டும். இனிமேல் அவற்றைத் தொடரக்கூடாது.

*(சனாதன சாரதி 1994 மார்கழி)*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



உ

உரும்பிராய்

# கருணாகரப் பிள்ளையார் கோயில்

## வருடாந்த மஹோற்சவம்

24.08.2001 (நாளை) வெள்ளி கொடியேற்றம் நண்பகல் 12.30 மணி.
01.09.2001 சனி தேர்த்திருவிழா பிற்பகல் 2 மணி.
02.09.2001 ஞாயிறு தீர்த்தத் திருவிழா பிற்பகல் 2 மணி.

தினசரி மாலை 5 மணியளவில்
பிரசங்க பூஷணம்
**ந.சிவசண்முகமூர்த்தி** அவர்கள்
பிள்ளையார் பெருமைபற்றிப்
பிரசங்கம் செய்வார்கள்.

விழாக்காலங்களில் விசேட நாதஸ்வர இசை, பஜனை என்பனவும் இடம் பெறும். அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

*கருணாகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய்.*

**உபயகாரர்கள்.**

(91452)

# பொன் விழாக் காணும் எங்கள் கல்லூரி அதிபர்



**உயர்திரு.நா.வன்னியசிங்கம்**

அவர்களின் பணி மேலும் சிறப்புற
வாழ்த்தி வணங்குகின்றோம்.

*புனித/பரியோவான் முதலுதவிப் படைப்பிரிவு,*
*யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.*

(91414)

# 100ஆவது பிறந்தநாள் வாழ்த்து





60 வயதில்
ஓய்வு பெறும் போது

100 வயதில்

வளமான வாழ்க்கைப் பாதை!

*பெயர்:-* **திரு.சின்னத்தம்பி ஆறுமுகம்**
*பெற்றோர்:-* **சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகள்**
*பிறந்த இடம்:-* *கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை*
*பிறந்த திகதி:-* 1901-08-23
*கற்ற கல்லூரி:-* யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
*உடன் பிறந்தோர்:-* சுந்தரம்பிள்ளை
வேலுப்பிள்ளை
கதிராசிப்பிள்ளை
*தொழில்:-* புகையிரத நிலைய அதிபர் (STATION MASTER)
(42 வருடங்கள் அரச சேவை)
*இல்லற வாழ்வின் இல்லதரசி:-* புன்னாலைக்கட்டுவன் தெற்கு
திரு.திருமதி **அம்பலவாணர் - சின்னத்தங்கம்** தம்பதிகளின்
புதல்வி சின்னம்மா
(62 வருடங்கள் இல்லற வாழ்வு)
*மக்கட் செல்வம்:-* 3ஆண்கள் 5 பெண்கள்.
*மகிழ்ச்சியுடன் நினைவில் நிற்பவை:*

1) யோக சுவாமிகள் இரு தடவைகள் வீட்டுக்கு எழுந்தருளி வந்து இன்னமுதுண்டு ஆசீர்வதித்தமை.
2) இந்தியாவிலுள்ள சகல திருத்தலங்களுக்கும் மூன்று தடவைகள் யாத்திரை செய்தமை.
3) இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற சகல ஆலயங்களையும் தரிசித்தமை.

எங்களை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து, பண்பும் அறிவாற்றலும் உள்ளவராக்கி, மகிழ்வுடன் இன்ப வாழ்வு வாழ வழிவகுத்த எமது அன்புப் பெற்றோருக்கு எமது பணிவான வணக்கங்கள் உரித்தாகட்டும்!

ஐயா!

"உங்களால் எங்களுக்குப் பெருமை. பூவுலகில் நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் இன்று போல் என்றும் மகிழ வாழ்ந்து எமக்கு நல்வழி பல காட்டி ஆசீர்வதியுங்கள்!" என்று புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகரையும் நல்லூர்க் கந்தனையும் பிரார்த்தனை செய்கிறோம்

நிரந்தர வதிவிடம்:-
"ஞானம் வாசம்"
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தற்காலிக வதிவிடம்:-
Dr. ஆ.திருநாவுக்கரசு
56, தேவாலய வீதி
(CHAPEL STREET)
யாழ்ப்பாணம்.

வாழ்த்தி மகிழ்வோர்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(91430)

## குடும்பஸ்தருக்கு கத்திவெட்டு

நெல்லியடி,ஓக.23

இரவு வேளை வீட்டில் புகுந்த கணவனும் மனைவியும், அங்கு படுத்திருந்த குடும்பஸ்தரின் கண்ணுக்குள மிளகாய்த்தூளை தூவிவிட்டு, பாளைக்கத்தியால் வெட்டிவிட்டு தலைமறைவானார்கள்.

இத்துணிகரச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் தக்கம் பனிக்கர் கோயிலடியில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் இடம்பெற்றது.

பொலிகண்டியிலிருந்து இடம் பெயர்ந்து இங்கு வசித்து வந்த அல்பிரெட் - ஜக்கன் (வயது 42) என்பவரே, தலை, கைகளில் வெட்டுக்காயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(க-109)

## நெற்செய்கையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.23

காலபோக நெற்செய்கையாளருக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலைய மண்டபத்தில் உரும்பிராய் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் ந.ஜெகதீஸ்வரி தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் J 258, J 259, J 257 ஆகிய கிராம சேவையாளர் பிரிவு நெற்செய்கையாளர்களைக் கலந்து கொள்ளுமாறு இருபாலை கிழக்கு விவசாய சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (க)

## சுன்னாகத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

சுன்னாகம்,ஓக.23

சுன்னாகம் தெற்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் இப்பகுதியில் மூன்று வீடுகளில் உடுபிடவை, மின்மோட்டர், பணம் என்பன திருடப்பட்டுள்ளன. மேலும் நான்கு வீடுகளில் மேற்கொண்ட திருட்டு முயற்சிகள் வீட்டார் விழித்துக்கொண்டதால் தடுக்கப்பட்டுள்ளன. (க-27)

## இடம்பெயர்ந்த மயிலிட்டி மக்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.23

1990 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள அனைவரையும் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றையும் எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.23

காங்கேசன்துறை சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன் அங்கத்தவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் 'மில்க் வைற்' தொழிலக வேலைக் களப் பகுதியில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு மாணவர் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

உ

சாவகச்சேரி

**செருக்கல்பதி கருணைமிகு சித்திவிநாயகர் கோயில்**

மேற்படி ஆலய மஹோற்சவ கொடியேற்று விழாதினம் நாளை (24.08.2001) வெள்ளிக்கிழமை ஆகும். இந்த மஹோற்சவ நாள்களில் விநாயகரை மனதால் நினைந்து அருள்பெறுவோம்.

*நல்லாசிகள்:*
"பண்டிதர்" சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்,
சாவகச்சேரி.

(C/17957)


# இவரைக் காணவில்லை



பண்ணாகம் நாகலிங்கம் மீனாட்சி (வயது 62 - உயரம் 4 அடி) கறுப்பு நிறத்தையுடைய நோய்வாய்ப்பட்டுள்ள இவரை 19-08-2001 ஞாயிறு மாலை முதல் காணவில்லை. இவர் சங்கானை, தொட்டிலடி, சுன்னாகம், சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் நடமாடித் திரிவதாகவும் தகவல். இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் முகவரிக்குத் தகவல் தரவும்; சன்மானம் வழங்கப்படும்.

**திரு.அ.இராமசாமி**
*பண்ணாகம் தெற்கு,*
*சுழிபுரம்.*

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**அலெக்ஸ்சாண்டர் இராயப்பு**
(செல்வசிங்கம்)

மண்ணில் 27.07.1959
விண்ணில் 23.08.2000

பன்னிரண்டு திங்கள் போச்சே!
பார்த்தவிழி மூடிப்போச்சே!
கருணையின்றி காலதேவன் உயிர்பறித்தானோ?

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (23.08.2001) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*புதுக்குடியிருப்பு,*
*பாசையூர்,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
டென்மார்க் பெரியண்ணன்,
சின்னண்ணன், பாசையூர் அண்ணன்,
தம்பி குடும்பம், மாமி, மைத்துனர்,
மச்சாள்மார், செண்யூட்ஸ் நண்பர்கள்.

(91371)



உ

பொன்னாலை

**ஸ்ரீமந் வரதராஜப் பெருமாள் தேவஸ்தான**
விஷு வருஷ ஆவணி
**மஹோற்சவப் பெருவிழா - 2001**
*விசேட உற்சவ தினங்கள்*

| | |
|---|---|
| கொடியேற்றம் | : 24.08.2001 வெள்ளிக்கிழமை |
| சப்பறத்திருவிழா | : 28.08.2001 செவ்வாய்க்கிழமை |
| மஞ்சத்திருவிழா | : 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை |
| ஸ்ரீ அனந்தசயனத் திருவிழா | : 05.09.2001 புதன்கிழமை |
| வேட்டைத்திருவிழா | : 08.09.2001 சனிக்கிழமை |
| தேர்த்திருவிழா | : 09.09.2001 ஞாயிற்றுக்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | : 10.09.2001 திங்கட்கிழமை |

காலை 9.00 மணிக்கு திருவடி நிலையில் நடைபெறும்.

*மகா கும்பாபிஷேகம்*

**இன்று (23.08.2001) வியாழக்கிழமை காலை நடைபெறும்.**

அடியவர்கள் அனைவரையும் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

- தேவஸ்தான பரிபாலன சபை.

(91422)

உ

# திருமண வாழ்த்து

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித்திங்கள் 8ஆம் நாள் (24.08.2001) வெள்ளிக்கிழமை காலை 8.11 மணிமுதல் 9.47 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

சின்னராசா தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**பற்குணம்**
(ஹப்பி ரெயிலறிங் மாட் உரிமையாளர்)
*அவர்களுக்கும்*



சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**சாந்தரூபி**
*அவர்களுக்கும்*

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இணையும் புதுமணமக்களை சகல செளபாக்கியங்களுடனும் பதினாறு பேறும் பெற்று நீடூழி காலம் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றோம்.

*612/5, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(91335)

திரு.செல்வராசா குடும்பத்தினர்
(சகோதரன் - ஜேர்மனி)
திரு.திருமதி சின்னராசா.

# பூக்கும் மா காய்க்குமா?

வரண்ட பிரதேசத்துக்குரிய பயிரான மாமரச் செய்கையின் மூலம் மாம்பழ உற்பத்தியில் உன்னத இடத்தை வகித்த யாழ். குடாநாட்டில் தற்போது மாமரங்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே யுத்த நடவடிக்கைகளினால் ஷெல் அடிபட்டதும் கனரக வாகனங்களினால் அழிவுற்றதும் போக,


தத்துப் பூச்சியினால் தாக்கப்பட்டபின் பூக்காம்புடன் மட்டும் காணப்படும் மா மரம்.

எஞ்சிய மரங்கள் குருவிச்சை மரக்களைக்கும், மாவிலைச் சுருட்டி வண்டின் தாக்கத்திற்கும், பின்னோக்கிப் படுதல் நோய்க்கும் எல்லாவற்றுக்கும் மேலாக மாவிலைத் தத்துப் பூச்சியின் அதிரடி நடவடிக்கையினால் 'பூ' உற்பத்தி செய்தும் பழத்தைக் கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஏன் இதனை அதிரடி நடவடிக்கை என்று கூறப்படுகிறது?

பூத்த மா காய்க்கும் என நம்பி இருந்த போது, காம்பு மட்டும் மிஞ்சியது. மிகவேகமாக பூவைத் தாக்கி அழித்த செயலையே 'அதிரடி' நடவடிக்கை எனக் குறிப்பிடுகிறோம்.

### மாவிலைத் தத்தி

(Leaf Hopper)

இதில் மூன்று வகையுண்டு. முன்பக்கம் அகன்று பின்பக்கம் கூம்பிய வடிவம் மிகவேகமாக நகரும் தன்மை. மிகவேகமாகத் தாவிப் பறக்கும் தன்மை. குத்தி உறுஞ்சும் வாயுறுப்பு. உறுதியான உடலமைப்பு. சூழலுக்கு இசைவாக அமைந்த நிறத்தைக் கொண்ட இறக்கை அமைப்பு (மரப்பட்டையின் நிறம்).

இதனால் இதை அதன் அசைவில் இருந்தே கண்டுகொள்ளமுடியும். மரத்தின் கிளையைத் தட்டும்போது கூட்டமாகப் பறக்கும். வேகமான வெப்பத்துடன் கூடிய காற்று வீசும்போது அடிமரத்துடன் அண்டியபகுதியில் கூட்டமாகக் காணப்படும். அத்துடன் இரவானதும் கிளைப் பாகங்களிலேயே இரவைக் கழிக்கும்.

மாமரங்கள் ஒரு வருடத்தில் இருமுறை பூத்துக் கனிகளைத்தரும். எனவே தத்துப்பூச்சிகளும் இரண்டு தடவை தமது சந்ததிகளைப் பெருக்கும் தன்மையுடையன. பொதுவாக 27°c - 35°c இற்கு உட்பட்ட வளிமண்டல வெப்பநிலை இருக்கும் போது ஓமோன்கள் சுரக்கப்பட்டு மாமரங்கள் பூக்கத் தொடங்குகின்றன. எனவே மொட்டுக்கள் ஆரம்பமானவுடன் பூச்சிகள் முட்டைகளை இடுகின்றன. இவை 3-5 நாள்களுள் பொரித்து அணங்குகள் வெளியேறும். மாம்பூவானது 'நுனிவளர்' பூந்துணர் ஆனபடியால் அடிப்பாகத்தில் இருந்து நுனியை நோக்கி பூத்துக் கொண்டு செல்லும். எனவே முட்டையில் இருந்து வெளியேறிய ஏறக்குறைய 150 - 200 அளவிலான 'அணங்குகள்' பூக்களின் சாற்றை உறுஞ்சிக் குடித்து மிக வேகமாக வளருகின்றன. இப்பருவத்தில் இவற்றிற்கு இறக்கைகள் இல்லை. நெய்யினுடைய நிறத்தை ஒத்ததாக இருக்கும். 10-15 நாள்களில் நிறையுடலி நிலையை அடைகின்றன. இப்பருவத்தில் கறுப்புக் கலந்த நரை நிறமாகக் காணப்படும். அணங்குப் பருவமே அதிக சேதத்தை உண்டு பண்ணும் பருவமாகும்.

### உண்டாக்கும் சேதம்

குத்தியுறுஞ்சும் வாயுறுப்பினால்

**கமமும் புலமும்**

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

பூக்களின் சாற்றை உறுஞ்சிக் குடிப்பதனால் பூக்கள் வாடிக் கருகி உதிரும். உறுஞ்சும்போது அதிலிருந்து வெளிவிடப்படும் **(Honey dew)** கழிவு, பாணியாக இலைகளில் படியும். இது சூரிய ஒளி படும்போது பளபளப்பாக, காட்சியளிக்கும். மரத்துக்குக் கீழ் சென்றால் மழைத்துளி விழுவது போல் பாணி விழும். வாகனங்களைக் கீழே நிறுத்தி வைத்திருந்தால் அதன் மேல் பாணி விழுந்து காய்ந்து பொட்டுப் பொட்டாகத்தெரியும். சிறிய காயகள் உதிர்ந்துவிடும். தாக்கம் அதிகரிக்கும் போது பூக்கிளைகள் எல்லாம் உதிர்ந்த பின்னர், பூக்காம்பு மட்டும்


தத்துப் பூச்சி குருத்து இலையின் சாற்றைக் குடித்த பின் தோற்றம்

காணப்படும். இக்காட்சியைக் கடந்த ஓகஸ்ட் 6 ஆம் திகதி எடுக்கப்பட்ட படங்களில் காணலாம். பூத்த நிலையிலும் தாக்கம் முடிவடைந்த பின் காம்பு மட்டும் உள்ள நிலையும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

முதிர்ந்த பூச்சியானது புதிதாக வெளிவரும் குருத்து இலைகளின் சாற்றை உறுஞ்சிக் குடிக்கும் இதனால் குருத்து இலைகள் சுருண்டும் காய்ந்தும் காணப்படும்.

### மாமரத்துக்கு ஏற்படும் பாதிப்பு

புதிய இலைகளும் பூக்களும் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகும் போது புதிய கிளைகள் உருவாகும் நிலை தடுக்கப்படுகிறது. ஏற்கனவே உள்ள திடகாத்திரமில்லாத இலைகளால் சரியான உணவைத் தயாரிக்க முடியாது. பாணிக் கழிவினால் பங்கசு தொற்றி இலைகளில் சேதத்தை ஏற்படுத்தும். வளர்ச்சி குன்றிக் காணப்படும். பின்னோக்கிப்படுதல் நோய்த தொற்று ஏற்பட்டு மேலிருந்து கீழ்நோக்கி கொப்புக்கள், கிளைகள் பட்டுக்கொண்டு போகும். பழங்கள் இல்லாத போது பறவைகள், விலங்குகள், பூச்சிகளின் நெருக்கம் இல்லாது போகும். அதனால் பறவைகள், விலங்குகளின் எச்சம் கிடைக்கமாட்டாது. இதனால் போதிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமற் போகும். வளர்ப்போனும் ஏனனத்துடன் உற்று நோக்குவான். இறுதியில் மரம்பட்டுப் போகும்.

### மனிதருக்கு உண்டாகும் பாதிப்பு

பூச்சிகள் வெளிவிடும் பாணிக் கழிவு வீட்டுச் சுற்றாடலைப் பாதிக்கும்.

கழிவில் இருந்து உண்டாகிய பங்கசு இலைகளில் தங்கி, காற்றடிக்கும் போது பறந்து, காற்றில் கலந்து சுவாசத்துடன் உள்செல்லும். இது ஒவ்வாமையை உண்டாக்கும்.

தரமான பழங்கள் கிடைக்காமற் போகும். பெருமளவில் செய்பவருக்கு வருமானம் இல்லாமல் பேகும்.

ஜாம், ஜூஸ் போன்ற தொழிற்சாலைகள் இயங்க முடியாது வேலை வாய்ப்பு அற்றுப் போகும். ஒரு கறுத்தக் கொழும்பான் மாமரம் 1000-1500 காய் காய்க்குமானால் ஒரு பழம் 4 ரூபா வீதம் 4,000 - 6,000ரூபா இழப்பு ஏற்படும்.

இறுதியாக முறையான மண்வளம், நீர்வளம், மனிதவளம் இருந்தும் வெளிநாட்டில் இருந்தே பழங்களும் ஏனைய உப உற்பத்தி பொருள்களுக்கும் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும்.

### தடுக்கும் முறை (பண்பாட்டு)

1. பொழுது கருகிய மாலை நேரம் மரத்துக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு குறிப்பிட்ட அளவு உயரத்துக்கு சுவாலை விட்டு எரியத்தக்கதாக நெருப்பு எரிக்க வேண்டும். தத்துப் பூச்சியானது நெருப்பை நோக்கிச் சென்று அதில் விழுந்து இறக்கும். இது ஒளிப்பொறி முறை எனப்படும்.

2. மரத்தின் கிளைகளில் எண்ணெய், பசை முதலியவற்றைப் பூசுவதன் மூலம் பூச்சிகளைக் குறைக்க முடியும்.

3. தத்துப்பூச்சியின் அணங்கு நிலையில் சிறு எறும்புகள், கும்பிடு பூச்சி என்பன பிடித்து அழிக்கும்.

4. பூத்தண்டுக் கிளைகளைத் தட்டும் போது அணங்குகள் நிலத்தில் விழ அவற்றை எறும்பு,, கோழிகள் பிடித்து உண்ணும்.

5. தற்போது வேப்பம்பழம் விழும காலம். விதைகளைப் பொறுக்கி உள்ளியும் சேர்த்து அரைத்து மரத்தின் பருமனுக்கேற்ப கலவை தயாரித்து விசிறுவதன் மூலம் அல்லது வேப்பெண்ணெய் உள்ளிக் கரைசல் சிறிதளவு சோப் கலந்து அக்கலவையைத் தெளிக்கலாம்.

பண்டைய காலங்களில் தாமிர (செம்பு) கம்பியையும் கந்தகக், கம்பியையும் கயிறு போன்று திரித்து பயன்தருமரங்களின் வேர்களில் கட்டுவார்கள். இதனால் 50 நாள்களில் பூச்சிப் பீடைகள் இல்லாமற்போகும்.

### இரசாயன நாசினி விசிறுதல்

இந்த நாசினிகள் பின்வரும் பெயர்களில் உள்ளன:-

டைமிதோயேற், காக்றோஸ டெம்றோ, பேபெக்றியோன் றேர்கர் 40, டிமிரொக்ஸ்.

பொதுவாக விவசாயம் செய்பவர்களின் வீடுகளில் ஏதாவது பூச்சி நாசினி இருக்குமானால், அதையும் பாவிக்கலாம். குறைந்தளவு மருந்துக்குக் கூடிய நீர்சேர்த்துப் பாவிக்கலாம். பூச்சிக்கு இது பாதிப்பை ஏற படுத்தும். முதலில் அடிப்பாகத்துக்கும் உள்பக்க கிளைகளுக்கும் மருநதைத் தெளித்தபின் வெளிப்பக்கம் பூக்கள், இலைகள் நனையும் படி தெளிக்கலாம்.

பூக்கும் முன்னர் மருந்து தெளிப்பது மிகவும் சிறந்தது. மாசிமாதத்திலும், ஆனி, ஆடி மாதகளிலும் கட்டுப்பாட்டைச் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். மருந்து தெளிக்கும் போது கோழி, மாடு, ஆடு போன்றவற்றை அடைத்துவைத்தல் நல்லது. அல்லது தூர இடத்திற்குக் கொண்டு செல்லுதலும் நன்று.

கையில் கிருமி நாசினி மருந்துகளை வைத்துக்கொண்டு தெளிகருவி இல்லை என்று மருந்து தெளிப்பதைக் கைவிடுபவர்களும் உள்ளனர். எமது வசதிக்கேற்ப - அகன்ற பாத்திரம்


பாதுகாக்கப்பட்ட பூந்துணருடன் கூடிய மாம் 'பூ'

ஒன்றை எடுத்து அதனுள் மருந்துக் கலவையைத் தாயாரித்து ஒரு கைப்பிடிள்ள பிளாஸ்ரிக் கோப்பையினால் அள்ளி கிளைகள், பூக்கள், இலைகள நனையும்படி விசிறலாம். மருந்து தெளித்த பின்னர், சகல உபகரணங்களையும் கழுவுவதுடன் சோப் போட்டு உடம்பைக் கழுவிய பின் தேங்காயெண்ணெய், நல்லெண்ணை பாவித்து கை, கால்களில் பூசுவதன் மூலம் எந்தப் பாதிப்பும் ஏற்படாதவாறு செய்யலாம். மேற்குறிப்பிட்டவை எனது செயன்முறை அனுபவங்களாகும்.

க.தனிநாயகம்
*தோட்ட முகாமைத்துவப் பகுதி, பளை.*

10 மி.லீற்றர், (1 மேசைக் கரண்டி) 10 லீற்றர் நீர் என்ற வகையில் கலவை தயாரிக்கலாம். மரத்தின் பருமனைப் பொறுத்து 10 - 20 லீற்றர் கலவை ஒரு மரத்துக்கு அவசியம்.

மருந்து தெளிக்கும் போது அயலவர்களையும் மருந்து தெளிக்கச் சொல்ல வேண்டும். அப்போதுதான் முழுமையான பலனைப் பெறலாம்.

# நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை காக்க அடுத்த சிலதினங்களில் மாற்று நடவடிக்கை!

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அறிவிப்பார்

கொழும்பு,ஒக.23

நாட்டில் இன்று உருவாகியுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையை நிவர்த்தி செய்ய சில மாற்று வழிகளைக் கையாளவிருக்கின்றேன். அந்த வழிகள் குறித்து சில தினங்களுக்குள் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும்.

இப்படிக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த் திங்கள் இரவு சமுர்த்தி அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பேசுகையிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டு, அது தொடருமானால அது அரசுக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பாதகமான விளைவையே தோற்றுவிக்கும்.

இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு அதிகாரத்தில் உள்ள அரசு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது மிக முக்கியமானதாகும். இதற்கு மாற்று வழி மூலம் தீர்வு காண்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நெருக்கடி நிலையை எந்த விதத்திலும் நீடிக்கவிட அரசு தயாராக இல்லை. ஏதாவதொரு மாற்றுவழி மூலமாவது நெருக்கடியைத் தீர்க்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இன்றுள்ள சூழ்நிலையில் சில சக்திகள் மேற்கொண்டு வரும் விசமப் பிரசாரங்களைநம்பி எவரும் ஏமாறக் கூடாது. நாட்டில் பெருங் கலவரம் ஒன்றை ஏற்படுத்த முயலும் சக்திகளை இனங்கண்டு அவற்றைத் தோற்கடிக்க மக்கள் உறுதி கொள்ள வேண்டும்.

சில அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் என் மீது விசுவாசம தெரிவிக்கும் விதத்தில் இராஜினாமாக் கடிதங்களை ஒப்படைத்துள்ள போதிலும், அவற்றில் ஒன்றைக்கூட நான் ஏற்கப்போவதில்லை. எவரும் பதவி விலக வேண்டிய நிலை இன்னமும் ஏற்படவில்லை.

எனது அமைச்சரவை மீதும் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் எனக்குப் பூரண



நம்பிக்கை இருக்கின்றது.

ஜனநாயகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு சுதந்திரமான கருத்துக்களை வெளியிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரதும் வாய்களுக்கு கட்டுப்போட ஒருபோதும் நான் முயன்றது கிடையாது.

மக்களோடு இருந்து கொண்டு மக்களுக்காகச் சேவைபுரிய முயன்று வரும் எவராயினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது பட்டம் பதவிகளைத் துறந்து, வீடு செல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். மக்கள் என்னைக் கூட விரும்பவில்லை என்றால் உடனடியாகப் பதவி துறக்கத் தயாராக இருக்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் உண்மையிலேயே பெரும்பான்மைப் பலத்தை எனது அரசு இழந்துள்ளது. இதனை நான் மறுக்கவில்லை. ஆனால் நாட்டு மக்கள் எனது அரசுக்கு அளித்து வரும் ஆதரவு மேலும் பெருகுவதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த தேர்தலில் நாம் பெற்ற வாக்குகளுக்கு உரிய விதத்தில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அது நடைமுறையில் உள்ள அரசமைப்பில் காணப்படும் ஓட்டைகள் காரணமாக ஏற்பட்டுள்ள விபரீதமாகும்.

நாட்டின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு, அடுத்த சில தினங்களுக்குள் சுதந்திரமானதொரு முடிவை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் வாதிகள், அரச ஊழியர்கள் உட்படப் பொதுமக்கள் அரசியல் பேதங்களை மறந்து, தேச விசுவாசத்துடன் செயறபட முன்வருமாறு அழைக்கின்றேன்.

எதிர்க்கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொடிய யுத்தத்தை, சமாதானத்துடன் முடித்து வைப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்குச் சகல சந்தர்ப்பங்களிலும் எதிர்க்கட்சியினர் தமது கட்டுப்பாட்டை மறந்து செயற்பட்டு வருகின்றனர்.

நாட்டில் பயங்கரவாதம் தலையெடுக்கக் காரணமாக அமைந்த பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் தீர்வைக் காண்பதில் எமது முயற்சியில் இருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

நாட்டில் சமாதானமும், அமைதியும் மலரும் வரை நான் ஒருபோதும் ஓயப்போவதில்லை. மக்கள் எனக்களித்த ஆதரவை ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யவும் மாட்டேன் - என்றார் ஜனாதிபதி. (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## DISSERTATION TYPE SETTING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள், தட்டச்சு வேலைகள் செய்து, Binding செய்து கொடுக்கப்படும். பிள்ளையார், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர். (91376)

## O/L கணிதம்

புதிய பழைய பாடத்திட்டத்திற்கமைய 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் DISTINCTION பெறுபேறடைவதற்காக சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு, மீட்டலுடன் வினாவிடை வகுப்புகளும் சிறப்புற நிறைவேற்றப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (91426)

## விற்பனைக்கு

Panasonic Video Cassette Recorder NV - FJ 600 AM Multi System HI - FI Stereo 6 Head Made in Japan என்பன விற்பனைக்கு உண்டு. 93, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கைலாசப் பிள்ளையார் கோயில் அருகில்). (91429)

சிவதொண்டன் சபையினரின் வெளியீட்டு நூல்கள், சைவத்திருமுறைத் திரட்டு, சிவயோக சுவாமிகள் அருளிய நற்சிந்தனை (ஐந்தாம் பதிப்பு), தாயுமானவர் பாடல்கள் இன்னும் பல நூல்களும் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன் பாக, நல்லூர். நேரம்: மாலை 2.00 - 7.00. (91423)

## தவறிவிட்டது

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னப்பிள்ளை என்பவருடைய தேசிய அ.அ. (இல. 366821449V), விசேட அ.அ. (இல. 0903016559) என்பனவும் பேர்ஸிடன் பணமும் 20.08.2001 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலிக்குச் செல்லும் மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ஐ. சிவானந்தராசா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம். (91438)

மீசாலை தெற்கு, மீசாலை என்னும் முகவரியுடைய செ.கருணாகரன் என்பவரது தேசிய அ.அட்டை (இல. 813042967V), விசேட அ.அட்டை (இல. 091021297) இரண்டும் யாழ்பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த.சின்னராஜா, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், கன்னாதிட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91441)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த முருகன் மஞ்சுளாவின் விசேட அ.அட்டை (இல.091007838), தேசிய அ.அட்டை (இல.746861745V), முருகன் பரமேஸ்வரியின் தேசிய அ.அட்டை (இல.547493087V) என்பன 17.08.2001 அன்று நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து துரை பேக்கரி, சூராவத்தை கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (91446)

## அபூர்வ ஜோதிடம்

வடநாட்டு சித்த மருந்தியல் மூலம் கடுமையான நோய்க்கு அற்புத சிகிச்சை, நல்வாழ்வுக்கான அதிர்ஷ்ட ஜோக பலனை அறிதல். தினமும் 8.30-2 மணி. ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (91442)

## ஒரு காதலின் கதை

32 வாரங்களாக நீங்கள் ஆர்வத்துடன் வாசித்த தொடர்கதையின் முடிவை இந்த வாரம் வாசியுங்கள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையால் எழுதப்பட்ட இந்த நாவலின் நூல் வடிவத்தை விரைவில் எதிர்பாருங்கள். (91445)

## ஒரு நாள் புறொயிலர் குஞ்சு

புறொயிலர் குஞ்சுகள் 24.08.2001 வெள்ளிக்கிழமை வருகின்றன. தேவைப்படுவோர் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (91453)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) இசைக்கலைமணி/நாட்டியக்கலைமணி பரீட்சைகள்

மேற்படி கற்கைநெறிகளின் முதலாம், இரண்டாம் வருடப் பரீட்சைகளுக்கான கால அட்டவணையை இசைத்துறை, நடனத்துறை, கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

☆ முதலாம் வருடப் பரீட்சைகள் 03.09.2001இல் இருந்து ஆரம்பமாகும்.

பதிவாளர். 15.08.2001. (C/17959)

## பொது விழிப்பு

பொது சாதாரண பரீட்சை வழிகாட்டி 2001

பிரதி விலை 30/=

கிடைக்கும் இடம்:
திகழ் கல்வி நிறுவனம்,
இணுவில். (C/17960)

உ
அருள்மிகு அம்பிகை துணை

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம்

## தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001

**கொடியேற்றம்**
23.08.2001 வியாழன் மு.ப.11 மணி

**சங்காபிஷேகம்**
27.08.2001 திங்கள் மு.ப.11 மணி

**வேட்டைத்திருவிழா**
31.08.2001 வெள்ளி பி.ப.2 மணி

**தேர்த்திருவிழா**
01.09.2001 சனி மு.ப.11 மணி

**தீர்த்தத்திருவிழா**
02.09.2001 ஞாயிறு மு.ப.9 மணி

அம்பிகையின் மஹோற்சவம் இனிது நிறைவுற மெய்யன்பர்கள் தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், புஷ்பம் போன்ற அபிஷேகத் திரவியங்களை உரிய நேரத்திற்குக் கொடுத்து அம்பிகையின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.* - ஆலய பரிபாலன சபையினரும், உபயகாரர்களும். (91457)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.23

பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை புதிய உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் மற்றும் சகல வலயக கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-10)

## கொழும்புக்கு இஸ்ரேலின் சரக்கு விமான சேவை

விமான நிறுவனங்கள் பலவும் கொழும்புக்கான தமது சேவைகளை நிறுத்தியுள்ள அதேசமயம், இஸ்ரேலின் 'ஏயர் லைன்ஸ்' நிறுவனம் கொழும்புக்கு புதிய சரக்கு விமானப் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்துள்ளது.

வாராந்தம் இந்தச் சேவைக்கு இஸ்ரேலின் விமான நிறுவனம் 'போயிங் 767' விமானத்தைப் பயன்படுத்த அந்நாடு முன்வந்துள்ளது.

இந்த விமானம் மூலம் 40 தொன எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்ல முடியும் என்று கொழும்பு விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-9)

## இராமேஸ்வரத்தில் 6 பேர் கைதாகினர்

இராமேஸ்வரம்,ஓக.23

இராமேஸ்வரம் வடகாடு என்னும் கடற்கரைப்பகுதியில் இருந்து இலங்கைக்கு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கடத்த எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாக இந்திய சுங்கத் துறையினர் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தல் தொடர்பாக இரு இலங்கையர் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மூவாயிரம் லீற்றர் எஞ்சின் ஓயில், ஐந்நூறு சைக்கிள் ரிம்கள், ஹெல்மட், மோட்டார் உதிரிப்பாகங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## மின்கம்பத்தை மோதி சேதப்படுத்திய லொறி

ஆனைக்கோட்டை வீதியில் மூத்த விநாயகர் கோயிலடியில் உள்ள மின் கம்பம் ஒன்றை லொறி ஒன்று நேற்று முன்தினம் மோதிச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக மின்சார சபையின் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட லொறி நிற்காமல் ஓடிவிட்டதாகவும்-

அந்த லொறியின் இலக்கம், அமைப்பு ஆகியன இனம் காணப்பட்டுள்ளன என்றும் - மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(க-3)

## இளையோர் தலைமைத்துவப் பாசறை

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் தீவக உயிர்ப்பூட்டல் குழு நடத்தும் 'இளையோர் தலைமைத்துவப் பாசறை' இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 6.30 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி தலைமைத்துவப் பாசறையில் தலைமைத்துவப் பண்புகள் தொடர்பாக எஸ்.ஜோசப் பாலாவும், கலைப்பண்பாட்டில் உறவாடல் தொடர்பாக எம்.பி.அன்றூவும் கருத்துரையாற்றுவர்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக 'அலை ஓசை' என்ற நூல் வெளியீடு மற்றும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களின் 'உதயத்தைத் தேடி' என்ற நாடகமும் இடம்பெறும். (க-6)

## கோப்பாய்ச் சந்தை மீண்டும் பாவனைக்கு!

கோப்பாய்ப் பொதுச்சந்தை மீண்டும் மக்களின் பாவனைக்காக நேற்று புதன்கிழமை முதல் திறந்துவிடப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து எடுத்துவரும் பொருள்களையும் இங்கு வைத்து விற்பனை செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கோப்பாய் கந்தசுவாமி ஆலய வீதியில் கூடப்பட்ட சந்தை வியாபாரம் தடுக்கப்பட்டுள்ளதால், ஆலய வீதியும் துப்புரவாகக் காணப்படுகிறது. (க-72)



உலக சென்.ஜோன்ஸ் தின வைபவம் யாழ்.இந்துக் கல்லூரியில் மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் சிறந்த படை வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட நல்லூர்ப் பிரிவுப் படை அத்தியட்சகர் க.பிரசாந்தனுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன் வெற்றிக்கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சனும் காணப்படுகின்றார். (ம-9)

## முன்பள்ளிகளின் செயற்பாடு மூலம் சிறந்த பிரஜைகளை உருவாக்கலாம்

### விளையாட்டு விழாவில் பேச்சு

வடமராட்சி,ஓக.23

முன்பள்ளிகளின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்க வழிசமைக்கும். முன்பள்ளிகள் சிறப்பாக செயற்படும்போதுதான் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் நாம் வெற்றி காணமுடியும்.

- இவ்வாறு யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி வடமராட்சி வடக்கு முன்பள்ளிகள் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவி திருமதி சற்குணராணி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசின் புதிய கல்வித்திட்டத்தில் முன்பள்ளிகளின் கல்விக்கு புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் திணைக்களமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்பள்ளிகளின் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றன. முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகள் மிகக் கஷ்டமானவை. இவர்களின் வாழ்க்கையையும் வளப்படுத்த வேண்டும் - என்றார்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. றோய் அடிகளார், கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், அறவழிப்போராட்டக் குழுத் தலைவர் வி.றூ.தங்கவேல், வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் ஏ. கனகரத்தினம், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசத்தியசீலன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-173)

## குடாநாட்டில் மரம் வளர்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.23

குடாநாட்டில் மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்க வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நிழல்தரு மரங்கள்,பயனதரு மரங்கள் , பழம்தரு மரங்கள், விறகுக்கான மரங்கள் என்ற வகையில் பல்வேறு விதமான மரக்கன்றுகளையும் நட்டு வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் பனை,தென்னை, மா, பலா, வேம்பு, மகோக்கனி, தேக்கு,சவுக்கு போன்ற மரக்கன்றுகளை நடவும், பேணி வளர்க்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் விறகுத் தட்டுப்பாடு உட்பட போதிய மரங்கள் இன்மையால் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவது தெரிந்ததே. இதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார் - என்றுள்ளது. (க-3)

## கைதாகிப் பிணையில் சென்றிருந்த இரு இளைஞர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.23

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் யாழ்.நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 13 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இராசையா தங்கராசா மற்றும் இரத்தினசிங்கம் ரமேஷ் ஆகிய இருவரும் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி ஆள் பிணையில விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இருவரையுமே விடுதலை செய்யுமாறு தற்போது சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். (க-6)

## வவுனியாவில் இம்மாதத்தில் 18 பேரைக் காணவில்லையெனப் புகார்

### எண்மர் குறித்துத் தகவல் இல்லை

வவுனியா மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் 18பேரைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இவர்களில் 10பேர் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தரப்பட்டுள்ளது என்றும் -

ஏனையோர் குறித்துத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் 450 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். (க-3)

# அடர்ந்த காட்டின் நடுவே தமிழ்ச்செல்வனைச் சந்தித்தோம்

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மடுத்திருப்பதிக்குச்சென்றிருந்த, காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கப்பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடினர்.

பின்னர் கொழும்பு திரும்பிய அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு 'நிப்பொன்' ஹோட்டலில் செய்தியாளர் சந்திப்புஒன்றை நடத்தினர்.

புலிகளுடனான தமது உரையாடல் தொடர்பான விவரங்களை ஜனாதிபதிக்குத் தெரிவிப்பதற்காக அவரைச் சந்திக்க அனுமதி கேட்டு இரு தடவைகள் 'பக்ஸ்' மூலம் கடிதங்கள் அனுப்பியதாகவும் —

ஆனால் இதுவரை தமக்கு பதிலேதும் கிடைக்கவில்லை என்றும் —

காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார அங்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைச் சந்தித்தது குறித்து அப்போது அவர் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது :-

காணாமற்போன எமது பிள்ளைகளுக்காக (காணாமற்போன படையினர்) பிரார்த்தனை செய்ய நாங்கள் மடுமாத தேவாலயம் சென்றோம்.

கடந்த 13 ஆம் திகதி மடுத் தேவாலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டில் கண்ணீர் மல்கிக் கதறியழுது எமது பிள்ளைகளுக்காகப் பிரார்த்தனை செய்துவிட்டு, தேவாலயத்திற்கு வெளியே வந்தோம்.

அப்போது விடுதலைப் புலிகள் அமைப்பினர் என்று தம்மை அறிமுகப்படுத்திய சிலர்,

எம்மை ஒரு புறமாக அழைத்துச் சென்று விசாரித்தனர். அவர்கள் மரியாதையாகவே எம்மிடம் கேள்விகளைக் கேட்டனர்.

நாம் எம்மைப் பற்றிக் கூறினோம். சிறிது நேரம் கழித்து வேறு சில விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களும் எம்முடன் கதைத்தனர்.

அவர்களிடம் தமிழ்ச்செல்வனைச் சந்திக்க விரும்புவது பற்றிக் கூறினோம்.

இது தொடர்பாகப்பின்னர் பதில் கூறுவதாகத் தெரிவித்துவிட்டு அவர்கள் சென்றனர்.

மறுநாள் 14 ஆம் திகதி சு. ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்க எமக்கு அனுமதி கிடைத்தது.

### தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

அன்று பகல் பத்து மணி அளவில் எமது சங்கப்பிரதிநிதிகளான நானும், செயலாளர் திருமதி புளோரன்ஸ் வெத்தசிங்க, திருமதிசாந்தினி நாணயக்கார, திருமதி பராக்கிரம அபேரத்ன, திருமதி குணவர்த்தன, திருமதி மாகிரெட் நாணயக்கார, இந்திர கமகே, பிராங்க் தபரேரா, கே. தியேஸ் ஆகியோரும் விடுதலைப் புலிகளின் வானொன்றில் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டோம்.

எங்களுடன் உயர் அதிகாரி ஒருவர் உட்பட விடுதலைப் புலிகள் அமைப்பின் சில உறுப்பினர்களும் உடன்வந்தனர்.

அடர்த்தியான காட்டுப் பகுதியினூடாக, மிகமோசமான பாதையொன்றின் வழியே நாம் பயணித்த 'வான்' சென்றது.

இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு நாம் சென்ற 'வான்' இலக்காகலாம் என்ற அச்சம் எமக்கு இருந்தது. பாதையோரங்களில் இருந்த மரங்களில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டுகளும் எமது அச்சத்தை அதிகரித்தன.

ஆனாலும் விடுதலைப் புலிகள் எமக்களித்த பாதுகாப்பைக் கண்டு நம்பிக்கையுடன் தொடர்ந்து பயணித்தோம்.

### வழியில் சோதனை

வழியில் இருந்த புலிகளின் சோதனைச் சாவடிகளில் வானை விட்டு இறக்கிச் சோதிக்கப்பட்டோம்.

சோதனைச் சாவடிகளில் பணியாற்றிய புலிப்படையின் சாதாரணதர வீரர்கள் எம்முடன் வானில் வந்த விடுதலைப் புலிகளின் உயர் அதிகாரியையும் சோதனையிடத் தவறவில்லை. அந்த உயர் அதிகாரியும் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினார்.

எமது பயண வழி நெடுகிலும் விடுதலைப் புலிகளின் படைப்பிரிவினரும் நாம் பயணித்தவானுக்குப்பாதுகாப்பு வழங்கியதை உணர முடிந்தது.

சுமார் ஐந்தரை மணித்தியாலப் பயணத்தின் முடிவில் — ஏறக்குறைய 110 கிலோமீற்றர்களைக் கடந்து — ஓரிடத்தில் வான்நிறுத்தப்பட்டு, அடர்ந்த காட்டின் மத்தியில் இருந்த ஒருவீட்டுக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம்.

அங்கு சு. ப. தமிழ்ச்செல்வன் எங்களை வரவேற்றார். அன்றைய தனது பொழுதை எம்முடன் கழிக்கும்படி தனக்குத்தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டிருப்பதாகத் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பின்னர் எமக்கு உணவு பரிமாறப்பட்டது. ஒரு தரமான ஹோட்டலில் வழங்கப்படக் கூடிய சுவையான உணவின் தரத்தில் எமக்கு விருந்தளிக்கப்பட்டது.

அதற்குப்பிறகு எம்முடன் தமிழ்ச்செல்வன் உரையாடினார்.

இலங்கையில் வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளும் அவர்களிடம் இருந்தன. எமது சங்கம் சமாதானத்துக்காக ஆற்றிவரும் பங்களிப்பைப் பத்திரிகைகள் மூலம் — குறிப்பாக தமிழ்ப்பத்திரிகைகள் மூலம் — தெரிந்து கொண்டதாகப் புலிகள் கூறினர்.

நம்முடன் அவர்கள் ஒற்றுமையுணர்வுடன் பழகினார்கள். தமிழ்ச்செல்வனுடனான எமது சந்திப்பு 4 மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது. அப்போது விடுதலைப் புலிகளின் அரசியல் நிர்வாகி தங்கன், தொல்காப்பியன், புலேந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர். தமிழ்ச் செல்வன் தமிழில் கூறியவற்றை, மிகநல்ல சிங்களத்தில் புலிகள் அமைப்பின் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் எமக்கு மொழிபெயர்த்துக் கூறினார்.

### அரசின் போக்கில் புலிகள் கவலை

புலிகள் தமது எண்ணம், அபிலாஷைகள் என்பவை பற்றி எம்மிடம் தெளிவாக எடுத்துக் கூறினார். புலிகள் நான்கு மாதகாலமாக யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்கு வருமாறு அரசுக்கு அழைப்பு விடுத்தும். தமது உண்மையான விட்டுக்கொடுப்பை அரசு உதாசீனம் செய்து விட்டதாக தமிழ்ச் செல்வன்

## படையினரின் உறவினர்களின் வன்னிப் பயண அனுபவம்

கவலை தெரிவித்தார்.

சமாதானத்தைப் பேச்சு மூலமே ஏற்படுத்த முடியும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

இன்றைய தென்னிலங்கை அரசியல்வாதிகள் தங்களிடையே புரிந்துணர்வுடன் ஒன்று பட்டுச் செயற்பட முடியாத போது, மாற்று மொழி பேசும் தம்முடன் எப்படி புரிந்துனர்வுடன் செயற்படுவார்களென நம்பமுடியும்? என்று புலிகள் கேள்வி எழுப்பினர்.

தாம் சிங்கள மக்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை என்றும்—

சிங்கள சுயநலவாத அரசியல்வாதிகள் போர் நடப்பதை விரும்பி, புலிகளை அதற்கு நிர்ப்பந்திப்பதாலேயே தாம் யுத்தம் புரிவதாகவும்—

சிங்கள மக்களுக்குத் தெரிவிக்கும்படி தமிழ்ச் செல்வன் கேட்டுக்கொண்டார்.

யுத்தம் நீடித்தால் இலங்கையின் பொருளாதாரம் சின்னாபின்னமாகிவிடும் என்பதை புலிகள் நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். புலிகளை யுத்தத்தால் வென்றுவிட முடியாது.

அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படும் புத்திசாலிகள் என்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, வரட்டுக் கௌரவத்தை விட்டுவிட்டு புலிகளுடன் பேச நமது அரசு முன்வர வேண்டும்.

வறுமை காரணமாகவே சிங்கள இளைஞர்கள் அரச படையில் இணைவதை தம்மால் உணர முடியுமென்று கூறிய தமிழ்ச்செல்வன், இதனைச் சுயநலத்துக்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்துவதை அறிந்துள்ளதாகக் கூறினார்.

சிங்கள மக்களின் நிலத்தில் ஒரு சதுர அங்குலம் கூடத் தமக்குத் தேவையில்லை என்றும் — தமிழர்களின் பிரதேசத்தினுள் தமிழர்கள் கௌரவமாக, தனித்துவத்துடன், சுதந்திரமாக வாழும் உரிமையையே புலிகள் கோருவதாகவும் —

இலங்கையைப் பிடிக்கும் நோக்கம் தமக்குச் சிறிதும் கிடையாது என்றும் —

தமிழ்ச்செல்வன் கூறினார்.

தமது நிலைப்பாட்டையும், கருத்துக்களையும், சிங்கள மக்களுக்கும், அரசுக்கும் தெளிவுபடுத்தி தம்முடன் பேச்சு நடத்த அரசைக் கோரும்படியும் —

நல்லெண்ணத்துடன் எந்த அமைச்சரையோ அல்லது அரசுப் பிரதிநிதியையோ புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அழைத்து வந்தால் அவருக்கு முழுப்பாதுகாப்பளிக்கத் தாம் தயாராக உள்ளதாகவும் —

விரைவில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே தமது விருப்பம என்றும் — விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

### புலிகள் பண்பானவர்கள்

விடுதலைப்புலிகள் போர் முனையில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் மிகவும் பண்பானவர்கள் என்பதே எமது கருத்து. தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் புலிகளைப் பற்றித் தவறான கருத்துகளைப் பரப்பி வருவது துரதிர்ஷ்டமானது. ஒரு நாளின் குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் மட்டுமே நாம் புலிகளுடன் செலவிட முடிந்தது. மேலும் சில நாள்கள் அங்கு இருக்க முடிந்திருந்தால் வன்னி மக்களின் நிலை உட்பட மேலும் பல விடயங்களை நாம் தெரிந்து கொண்டிருப்போம்.

எமது பிள்ளைகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை. புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் எமது பிள்ளைகளும் உள்ளார்களா என்பதை அறிய, புலிகள் வசம் உள்ள இலங்கைப் படைவீரர்களின் பெயர்ப்பட்டியலைப் பார்ப்பதற்குக்கூட நாம் இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளது.

விமானம் ஒன்று வன்னி மீது பறக்கும்போது அங்குள்ள குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரையிலான அப்பாவிப் பொதுமக்கள் அடையும் மரண பயம். அவஸ்தை என்பவற்றை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. அந்தத் துன்பத்தை எம்மிடம் விவரித்த தமிழ்ச்செல்வன் — 'இத்தகைய துன்பம் உங்களுக்கு ஏற்படுவதை நீங்கள் ஏற்பீர்களா? என்று எம்மிடம் கேட்டார்.

வன்னிக்குச்சென்ற பின்னர்தான் யுத்தத்தின் தாக்கமும், அதனால் தமிழ் மக்கள் படும் அவதியும் எமக்குப் புரிந்தன. இந்த யுத்தத்தால் இரண்டு தரப்பிலுமே அப்பாவிகள் மடிகின்றனர்.

எனவே பேச்சுக்கு அரசை செல்லத் தூண்டும் ஆர்ப்பாட்டங்களை தென்னிலங்கையில் நடத்த எமது சங்கம் திட்டமிட்டுள்ளது.

எமது பிள்ளைகளை விடுவிப்பதே காணமற்போன படையினரின் உறவினர் சங்கத்தின் முதற்கடமை என்றபோதிலும் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிப்பதும் எமது கடமையாகும்

எமது பிள்ளைகளை மீட்பதும், சமாதானம் ஏற்படுவதும் பழமும் தோலும் போன்றவை. எனவேதான் புலிகளின் சமாதானச் செய்தியை நாம் கொண்டு வந்துள்ளோம்.

'போர், போர்' என்று கூச்சலிடும் இலங்கையின் சில அமைப்புகள், உண்மையிலேயே நாட்டுப் பற்றுடன் இருந்திருந்தால், பொருளாதாரத்தையே ஆட்டம் காணவைத்த கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் அந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் அல்லவா சேர்ந்திருக்க வேண்டும்? ஆனால் அவர்களில் ஒருவர்கூட அதைச் செய்யவில்லை.

இலங்கையின் எந்த ஒரு பெரிய அரசியல் கட்சியும் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்று நாம் நம்பவில்லை. இன்றைய ஜனாதிபதி சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஆர்வமாக இருப்பதாலும் — சமாதானத்தை உருவாக்கக் கூடிய அதிகாரம் அவரிடமேஉள்ளது என்பதாலும்—

சமாதானப்பேச்சை முன்னெடுக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் அழைப்பு விடுக்கிறோம்.

இவ்வாறு ஈ. பி. நாணயக்கார செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ)

---

# இடம்பெயர்ந்த மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம்

## பிரதேச செயலகங்களுக்கு சுற்று நிருபம்

கோண்டாவில், ஓக. 23

இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் செயற்படுத்தவுள்ளனர்.

இத்திட்டம் பற்றிய சுற்று நிருபங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வழங்கப்படவுள்ள இந்தப் புலமைப்பரிசிலைப் பெறத்தகுதியான மாணவர்களின் பட்டியல்களை கிராம அலுவலர்கள் தயாரித்து வருகின்றனர்.

இந்தப் புலமைப்பரிசில் உதவியைப் பெறுவதற்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் அல்லது சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றவர்களாகவும், 18 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் தற்போது அரச பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர்களாகவும் இருப்பதுடன், ஏற்கனவே எந்தவொரு புலமைப் பரிசில்களையும் பெறாதவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு இது குறித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (க-86)

---

# 13 ஆயிரம் ரூபா அபராதம்

வலி. வடக்கு, ஓக. 23

சட்ட விரோதமான முறையில் 15 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மானிப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து 13 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இத் தண்டனைக்கு உள்ளானவர் மானிப்பாய் பிரதான வீதியைச் சேர்ந்த இராசேந்திரம் ரவி என்பவர் ஆவார்.

(க-86)

---

# பதில் பதிவாளருக்கு விரைவில் நிரந்தர நியமனம் கிடைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதிமொழி

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் பதில் பதிவாளர்களை நிரந்தர சேவையில்உள்வாங்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி அளித்துள்ளார் என்று பதிவாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பதில் பதிவாளர்களாகப் பல வருடங்களாகப் பணிபுரியும் 28 பேரை நிரந்தர நியமனம் வழங்கி உள்வாங்க நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சருடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் கோரிக்கை விடுத்ததாகவும்—

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்ததாகவும்— பதிவாளர் சங்கப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர். (க-3)

# தளபாடங்கள் அன்பளிப்பு

கோப்பாய், ஓக. 2

கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை யாழ்ப்பாணம் ஈ. எஸ். பி. நிறுவன உரிமையாளர் அன்பளிப்பாக வழங்கி உள்ளார். (க-72)

## மகாபொல புலமைப்பரிசில் வைபவம்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ். பல்கலைக்கழகத்தின் 2000/2001 கல்வியாண்டுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம், செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு பலகலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

(க-10)

# திருடச் சென்றவர் மதில் வீழ்ந்து நசியுண்டு படுகாயமடைந்தார்

## மறுநாள் மயங்கியநிலையில் மீட்பு

நெல்லியடி,ஓக.23

இரவுவேளை வீடு ஒன்றில் திருடும் நோக்கில் மதிலால் ஏறமுற்பட்டவர், அந்த மதில் உடைந்து வீழ்ந்ததினால் அதற்குள் நசியுண்டார். இவருடன் கூட வந்த சகாக்களினால் தூக்கிச் செல்லப்பட்ட அவர் 10 மணித்தியாலத்தின் பின் மயங்கிய நிலையில் வேறொரு இடத்திலிருந்து மீட்கப்பட்டு, மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் திருட்டு முயற்சி சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 10 மணியளவில், புலோலி கிழக்கு, மாதனையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது:-

இரவுவேளை ஆளரவம் கேட்டதைத் தொடர்ந்து, ஏதோ இடிந்து விழும் சத்தம் கேட்டுள்ளது. உடனடியாக அயலவர்கள் வெளியே வந்துள்ளனர். அப்போது சிலர் பற்றைகள் வழியாக ஓடிச் சென்றுள்ளனர்.

பின்னர் அவதானித்ததில் மதில் இடிந்து வீழ்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு இரத்தமும் காணப்பட்டது.

மறுநாள் காலை அயலவர்கள் அப்பகுதியில் நோட்டம் விட்டுள்ளனர். அப்போதே சுமார் அரை மைல் தூரத்தில் மதில் விழுந்து காயமடைந்தவர் மயங்கியநிலையில் மீட்கப்பட்டார்.

காயமடைந்தவர் சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து புலோலி தம்பசிட்டியில் வசிக்கும் கதிர்காமு சுந்தரலிங்கம் (வயது 36) என்பவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(க-109)


## விற்பனைக்கு

ஓகஸ்ட் மாதத்துக்கான 'கொம்பியூற்றர் ருடே' புத்தகங்களும், கடந்த மாதங்களுக்குரிய புத்தகங்களும் விற்பனைக்குண்டு.

ராஜாகுறோசறி,
*இல.153, மின்சாரநிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(91459)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது சங்கச் செயற்பாடுகளுக்கு பல்வகையிலும்
உதவி வருகின்ற

### திரு.த.இரவீந்திரதாஸ் அவர்கள்

தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமைக்கு அவருக்கு எமது பாராட்டைத் தெரிவித்து, அவரின் தன்னலமற்ற சேவை தொடர வாழ்த்துகிறோம்.

பணிப்பாளரும், பணியாளரும்
*கட்டைவேலி - நெல்லியடி*
*ப.நோ.கூ.சங்கம்.*

*23-08-2001*
*கரவெட்டி.* (C/17963)

## கைதடி இனுங்கித் தோட்டம்
## அருள்மிகு கந்தசுவாமி ஆலய
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று (23-08-2001) வியாழக்கிழமை 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பதினொரு நாள்கள் திருவிழா நடைபெறும்.

| | | |
|---|---|---|
| எட்டாம் நாள் | 30-08-2001 | - வேட்டைத் திருவிழா |
| ஒன்பதாம் நாள் | 31-08-2001 | - சப்பறத் திருவிழா |
| பத்தாம் நாள் | 01-09-2001 | - தேர்த் திருவிழா |
| பதினொராம் நாள் | 02-09-2001 | - தீர்த்தத் திருவிழா |
| பன்னிரண்டாம் நாள | 03-09-2001 | - பூங்காவனத் திருவிழா |

கைதடியில் தற்போது வசிப்போரும் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கும் அடியார்களும் மஹோற்சவ தினங்களில் கலந்து கொண்டு வழிபாடாற்றி முருகப்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

*கைதடி.* (C/17964) - ஆலய பரிபாலன சபையினர்.

## உளம் கனிந்து நன்றி கூறி பாராட்டுகிறோம்

**கலைவாணி ச.ச.நிலையம், கலையரங்கம், கலைவாணி கடற்றொழில் சங்கம், மகளிர் மன்றம், விளையாட்டுக்கழகம்**
போன்ற எமது அமைப்புக்களுக்கு அவற்றின் வளர்ச்சிக்காக பல லட்ச ரூபாய்களை அள்ளி வழங்கிய வரும் மக்களின் தேவை அறிந்து வாருங்கள், வாருங்கள் என அழைத்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனப் பல உதவிகள் புரிபவரும் சொன்னதைச் செய்வோம், செய்வதையே சொல்வோம் என்ற மன வலிமை படைத்தவருமாகிய



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்
யாழ்.மாநகர உறுப்பினர்களான
**திரு.றீகன்** மற்றும்
**திரு.மைக்கல் யேசுதாசன்** ஆகியோர்களுக்கும்
மற்றும் சக உறுப்பினர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைக் கூறி உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து பாராட்டுகின்றோம்.

*கோயில் ஒழுங்கை,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.* (91461)

கலைவாணி ச.சமூக
நிலைய நிர்வாகிகள்.

## அவரை இன பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.மாவட்டத்தில் அவரை இனப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவரை இனப் பயிர்களான பயறு, கௌபி மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை யாழ்.மாவட்டத்தில் மிகவும் குறைந்து வருவதாகவும், இதனால் அவற்றை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமெனவும், உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்தார்.

அவரை இனப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான ஒருநாள் பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செய்கையில் ஆர்வமுடைய விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் பெயர்களைப் பதிவு செய்து, மேற்படி நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)

## ஆரம்ப விற்பனை நிகழ்வு நாளை

கோப்பாய்,ஓக.23

கோப்பாய் வடக்கு மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் சுயதொழில் முயற்சிக்கான திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் ஆரம்ப நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் திணைக்கள யாழ்.முகாமையாளர் எஸ்.இராகவன் கலந்துகொள்வார்.

(க-72)

## மாணவருக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.23

சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் த.க.பாடசாலை மாணவர்களின் நலன்கருதி செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் வலி.மேற்குப் பிரிவு பிளாஸ்ரிக் வாளிகள், சோப்பை, சவர்க்காரம், தொப்பி ஆகியனவற்றை அண்மையில் பாடசாலை அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளையின் தலைவர் டாக்டர் வை.தியாகராஜா இப்பொருள்கள் கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டார்.

(ஜ-135)


நெல்லை நகரில் . . . . .

## "லவ்லியின்"

மற்றும் ஒரு சேவை!

நவீனமுறையில் சீரமைக்கப்பட்ட 'லவ்லி' கூல்பாரின்
மேல்மாடியில்!!

**காலை, மதிய, இரவு உணவுகள்**

- சான்விச்சஸ்
- நூடில்ஸ்
- புரியாணி
- பிறைட்றைஸ்
- பிசா

சாதாரண, விசேட உணவு வகைகள்
மற்றும் உங்கள் இல்லங்களில் நடைபெறும் விசேட
வைபவங்களுக்குத் தேவையான
★ உணவு வகைகள் ★ சிற்றுண்டி வகைகளை
ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

'லவ்லி'
பிரதான வீதி, நெல்லியடி.

(91458)


## கந்தரோடை அருளானந்த பிள்ளையாரின் அத்யந்த பக்தன்

கந்தரோடை, அராலி ஆகிய ஊர்களுக்கிடையே பழைய காலந்தொடக்கம் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. 'பருவகால ஆறு' எனப்படும் வழுக்கை ஆறு கந்தரோடையில் உற்பத்தியாகி அராலி கடலில் சங்கமிக்கின்றது. கடல் வழியாக ஆறியில் அராலிக்கு வந்த வெளிநாட்டினர், வழுக்கையாறு ஊடாகக் கந்தரோடைக்கு வந்தமை வரலாறு. வழுக்கை ஆற்றின் "ஆற்றுப்படுத்தலில்" இவ்விரு ஊர்களின் தொடர்பும் வலுவடைந்தது.

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும் பிரதம அர்ச்சகருமான பிரம்மஸ்ரீ இ.சோமேஸ்வரசர்மாவின் சிரேஷ்ட புத்திரி உஷாநந்தினிக்கு, தன் சிரேஷ்ட புத்திரன் சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக்குருக்கள் (மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம சிவாசாரியார்) அவர்களைத் திருமணம் செய்து வைத்து, இரண்டு ஊர்களுக்கிடையிலான உறவை மேலும் வலுவடைய வைத்தவர் சமீபத்தில் தன் 73ஆவது வயதில் அமரரான பிரம்மஸ்ரீ சி.பரமேஸ்வரசர்மா ஆவார்.

அராலியில் ஆதிசைவர் குலத்தில் பிறந்த அந்தண சிரேஷ்டரான இவர் 1940 - 1950களில் ஈழகேசரி, சுதந்திரன் மற்றும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளிலும் 'பரணி' என்ற புனைபெயரில் சிறுகதைகள், குறுநாவல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

கந்தரோடைக்கு வரும் போது தன் மகனின் இல்லத்தில் தங்கி, சமய இலக்கிய நூல்களைப் படிப்பதிலும் நண்பர்களுடன் உரையாடுவதிலும் ஈடுபட்டு மகிழ்ந்தார். தன் மகன் மூலம் வந்த வம்சாவளிப் பேரன் சிரஞ்சீவி ராஜீவசர்மாவின் உபநயனத்தையும், தன் கனிஷ்ட புத்திரன் ப.முத்துக்குமாரசர்மா (நல்லூர் முருகன் தேவஸ்தான அர்ச்சகர்)வின் திருமணத்தையும் அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திலே சிறப்பாக நடத்தியமை அவர் பிள்ளையாரில் கொண்டிருந்த பக்தியையும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

கந்தரோடை மண்ணில் இவரின் பூதவுடல் சங்கமமாவதற்கும், ஆத்ம சாந்திக்கிரியைகள் நடைபெறவும் அவர் கந்தரோடையிலும், அப்பகுதி மக்களிலும் கொண்ட பற்று, பாசம், மதிப்பு ஆகியவையே காரணமாகின.

அடக்கம், எளிமை, பணிவு முதலிய நற்பண்புகள் நிறைந்த இவரின் நினைவு கந்தரோடையில் நீடித்து நின்று நிலைக்கும். இன்று (23.08.2001) வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ள தசாகம் முதலிய கிரியைகள் அன்னாரின் ஆத்மாவைத் திருப்திப்படுத்தி சிவப்பேறடையச் செய்யும் என நம்பி அருளானந்தப் பிள்ளையாரை இறைஞ்சுவோம்.

*ஓம் சாந்தி!*

- பிரம்மஸ்ரீ இ.சோமேஸ்வர சர்மா -

(C/17961)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி பாலசுந்தரம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் 43/2, யமுனா வீதி, செம்மணி றோட், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி பாலசுந்தரம் 21-08-2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோன்மணி ஆகியோரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - அம்மாப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகளும், பாலசுந்தரத்தின் (யாழ்.அரசினர் வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், கௌரி (ஜேர்மனி), பழனிவேல் (தாஸ்கடை ஊழியர், திருநெல்வேலி), வத்சலா (நல்லூர் மூத்த விநாயகர் முன்பள்ளி ஆசிரியர்), பொன்.கிருஷ்ணவேல் (சி.சி.த.க. பாடசாலை மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராம்குமார் (ஜேர்மனி), சிறிசங்கர் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், சதுசனின் (ஜேர்மனி) அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சறோசினிதேவி, இராசேஸ்வரி, சிவபாதம், விக்னேஸ்வரன் மற்றும் ஈஸ்வரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வலோகநாயகி, பரமசிவம், யோகாம்பிகை, கிருஸ்ணகுமாரி, கெங்காதேவி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-08-2001) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*43/2, யமுனா வீதி,*
*செம்மணி றோட்,*
*நல்லூர்.*

தகவல்:
கி.பாலசுந்தரம் (கணவன்)
பா.பழனிவேல் (மகன்)

(91463)

பதவி விலக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கும் போது

# அமைச்சர்கள் இராஜினாமாக் கடிதம் வழங்கும் நடவடிக்கை தேவையற்றது

## அமைச்சர் பீரிஸ் சொல்கிறார்

இன்றைய அரசியற் சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி எந்தவொரு அமைச்சரையும் எந்த வேளையிலும் பதவியிலிருந்து விலக்கமுடியும் என்பதால் அமைச்சர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதிக்கு வழங்கவேண்டிய அவசியம் இல்லை.

இது குறித்து சர்ச்சை எழவேண்டிய தேவை இல்லை.

- இவ்வாறு அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர்களிடமிருந்து திகதியிடப்படாமல் வழங்கப்படக்கூடிய ஒரு இராஜினாமாக் கடிதம் கோட்பாடுகளுக்கும் ஜனநாயக நடைமுறைகளுக்கும் முரணானது. அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியின் தற்துணிவின்படி வழங்கப்படுவன. அவர் வேண்டிய நேரத்தில் எந்தவொரு அமைச்சரவையும் அமைச்சரவையிலிருந்து நீக்கிவிடமுடியும். இந்தநிலை இருக்கும் போது அமைச்சர்கள் இராஜினாமாக் கடிதம் கொடுக்கத் தேவையில்லை.

ஆனால் எம்.பிக்களின் விடயம் அடிப்படையில் வேறுபட்டது அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். தம்மைத் தெரிவு செய்தவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இது சட்டத்தின் கண்டிப்பான வரையறைகளுக்கு உட்பட்டு நடைபெற வேண்டிய ஒன்று - என்றார். (ம)


### திருப்பி ஒப்படைக்கவும்

21.08.2001 செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து கப்பலில் யாழ்ப்பாணம் வந்த பயணியான திருமதி சந்திரவதனா கருணாகரன் (சாமி அம்மா விமலா) என்பவருடைய மிகவும் பெறுமதிவாய்ந்த ரேடியோ, தேமஸ் பிளாஸ்க், பணம் (பேர்ஸ்டன்) வேறு பொருள்களும் அடங்கிய பொதியைக் கார்ச் சாரதி ஒருவரிடம் கொடுக்க அவர் அதைத் தவறுதலாகத் தம்முடன் கொண்டுபோய்விட்டார்.

ஆகவே தயவுசெய்து அப்பொதியைத் திருப்பி எம்மிடம் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி சந்திரவதனா கருணாகரன் (சாமி அம்மா விமலா)
(91466) *திருப்பதி ஆச்சிரமம், தெல்லிப்பழை.*



### நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

மேற்படி எமது கல்லூரியின் புதிய மேல்மாடி கட்டடத்துக்கு 10 லட்ச ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து அந்நிதியிலிருந்து 5 லட்ச ரூபாவை உடன் வழங்கி உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி புனரமைப்பு, புனர்வாழ்வு
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள்
இந்து கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவரும்
வலி.தெற்கு பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய
உயர்திரு.
**கைலைநாதன் கமலசேகரன்**
அவர்களுக்கும்



வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினரும்
வலி.தெற்கு பிரதேச ஈ.பி.டி.பி.
பிரதி அமைப்பாளருமாகிய
**திரு.சிவதாசன் சந்திரகாந்தன்**
அவர்களுக்கும்

எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து
உளங்கனிந்த வாழ்த்துக்களையும் கூறுகின்றோம்:

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

*கந்தரோடை, சுன்னாகம்.* (91467)


## கிரிக்கெட் போட்டி

குருநகர்,ஓக.23

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 12 வயதுக்குட்பட்டோர்க்கான 'சுப்பர் சிக்ஸ்' உதைபந்தாட்டப்போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.45 மணி புனித ஜோண்ஸ் கல்லூரி எதிர் புனித ஜோசப் வித்தியாலயம்.

★ மாலை 4.30 மணி ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேச வித்தியாலயம் பிற்பகல் 5.10 மணி புனித ஜேம்ஸ் ம.வி. எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி. (ம-51)

## வரணி ம.வி. ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.23

வரணி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு 'எக்சலன்ற்' கல்வி நிலையத்தில் தவறாது சமுகம் தருமாறு அதிபர் க.நவரத்தினராசா கேட்டுள்ளார். (ம)

## பதவியுயர்வு

யாழ். மாநகர சபையில் வேலை மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றிய 8 உத்தியோகத்தர்கள் வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தொழில் நுட்ப உதவியோகத்தர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 5வருடங்களுக்கு மேலாக வேலை மேற்பார்வையாளர்களாக கடமையாற்றிய பி.ஜனகன், எஸ். கணேசலிங்கம், எஸ்.சுசீந்திரராஜா, எஸ்.சிவயோகராஜா, எஸ்.ரங்கநாத சர்மா, ரி.ராஜு, கே.சற்குணராஜா, எஸ்.தவராஜசேகரம் ஆகியோரே இவ்வாறு பதவி உயர்வு பெற்றவர்கள் ஆவர்.

இவர்களுக்கான பதவி உயர்வு தொடர்பான அறிவித்தல் வடக்கு-கிழக்கு பொது நிர்வாக அமைச்சினால் யாழ்.மாநகர சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-4)

## நீதிமன்றில் ஆஜர்

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 இந்திய மீனவர்களில் 9 பேர் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (ம-6)


**நாகம்ஸ் சுன்னாகம்**
இன்று மட்டும்
வேணு, ரோஜா (இரட்டை வேடம்)
நடித்த
**பொட்டு அம்மன்**
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91460)

**ராஜா யாழ்ப்பாணம்**
லேடி சுப்பஸ்ரார்
விஜயசாந்தி, சரத்குமார்
நடிப்பில
**முதலமைச்சர் ஜெயந்தி**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17875)


## நல்லூரில் தவறவிட்ட பொருள்கள்

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தின்போது அடியார்களால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், தங்க ஆபரணங்கள், திறப்புகள், வெள்ளிக் காற்சங்கிலிகள் என்பன யாழ்.மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் யாழ். மாநகர சபையின் இந்து விடுதியில் உரிய ஆதாரங்காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-4)


### ஆன்மார்த்த அஞ்சலியுரை

கெருடாவில் கொம்மாந்துறை மனோன்மணியம்மன்
நிற்கெழு வைரவர் தேவஸ்தான பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமாகிய
**வெங்க.இரத்தினசாமிக்குருக்களின்**
ஆத்மா பரஞ்சோதியுடன் கலக்க பரம்பொருளை பிரார்த்திப்போமாக.
சுபமஸ்து.

சிவஸ்ரீ.தி.மாணிக்கவாசகக்குருக்கள்,
*கோப்பாய்.* சிவஸ்ரீ.க.சோமசுந்தரக்குருக்கள்,
(91471) அனைத்துலக சைவக் குருமார் பேரவை ஒன்றியம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிரான்சிஸ் லூர்த்தம்மா

இல.33, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் லூர்த்தம்மா 18.08.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபதேயு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் விசேந்தி பிரான்சிஸின் (பேபிராசா - ஓய்வூதியர், துறைமுக அதிகாரசபை ஊழியர்) அன்பு மனைவியும் றோஸ் இமல்டா (பபி), மேரி கொறற்றா (யோகம்), டக்ளஸ் (கனடா), மேரி பெனிற்றா (சாந்தி, கொலண்ட்), மேரி லெனிற்றா (வசந்தி), காலஞ்சென்ற பேனாட், டியூட்ஸ் (பாபு, கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரி இராஜநாயகம் (சவூதி), டோமினிக் (ஜெயரெட்ணம்), வரோணிக்கா (கனடா), யோசப் கிறிஸ்ரி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லெற்றீசியா தயாழினி, பற்றீசியா ஜெயந்தினி, நீல் எடிசன், டில் றுக்ஷன், ஜான் ஜஸ்மின் (சகுந்தலா), கிஷாந்தா சுஜின் (மாணவி - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ஜொனிக்கியோமன் (மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றெக்ஷிக்கா, றோமி சிந்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.08.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 (இ.நே.) மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*33, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.* (91474)
டோமினிக் ஜெயரெட்ணம் (மருமகன்)

### சின்னக்குட்டி செல்வரட்ணம்

(குஞ்சையா எருவன்)

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி செல்வரட்ணம் நேற்று (22-08-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெகதீசன் (ஈசன்), குகதாசன் (லண்டன்), சிறிதரன், பகீதரன், தாரணி (கொடிகாமம், திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-08-2001) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*குடமியன் வரணி, கொடிகாமம்.* (C/17968)
ஈசன் (மகன்)

### திருமதி விஜயாம்பாள் மகாதேவன் சோமசுந்தரம்

நல்லூரைச் சேர்ந்த திருமதி விஜயாம்பாள் நேற்று (22-08-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (கனடா), விஜித்தா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயரட்ணத்தின் சகோதரியும், சட்டத்தரணி பா.தவபாலன், இ.ஜெயா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீவ் (லண்டன்), காண்டீபன் (சென்.ஜோன்ஸ், கல்லூரி), சாயிசஞ்சீவ் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி - கொழும்பு), தவலக்ஷ்மி (சைவ மங்கையர் கழகம் - கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காந்திமதியின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*82/5, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.* (91473)
லயன் பா. தவபாலன் (சட்டத்தரணி)
T.P. 3147

### இராமலிங்கம் வரதராஜா

பண்ணாகத்தைச் சேர்ந்த இராமலிங்கம் வரதராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (22.08.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம் - மாரிமுத்துவின் அன்பு மகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சும்மந்தமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்) - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவராசா (நியூஸ்லாந்து) சுசீலா, கோகிலா (ஜேர்மனி), தேவகி (மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முன்னாள் உத்தியோகத்தரும் தற்போது நியூஸ்ரார் பார்மஸி, சித்தன்கேணி), துரைராஜா (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதனலைலி (நியூஸ்லாந்து), ஆசோக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை, சிவகுருநாதன் (கொழும்பு), சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2001) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஆலடி வைரவர் கோயிலடி, பண்ணாகம், சுழிபுரம்.* (C/17969)
மனைவி, மக்கள்.


ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நமக

தவிர்க்க முடியாத சில காரணங்களால் நாளை (24.08.2001) வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த திருமண வைபவம் 30.08.2001 இல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

### திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித்திங்கள் 14ஆம் நாள் (30.08.2001) வியாழக்கிழமையும், சித்த யோகமும், உத்தராட நட்சத்திரமும் கூடிய மு.ப. 10.00 மணிமுதல் 11.10 வரையுள்ள சுபவேளையில்

திருமதி வை.கணேஷ் தம்பதிகளின்
திருநிறை செல்வன்
**சந்திரமோகன் (மோகன்)**
(B.Com.Hon.)

திரு.திருமதி கா.சுரேந்திரன் தம்பதிகளின்
திருநிறை செல்வி
**ஜனனி (ஜனா)**

ஆகிய இருவருக்கும் எல்லாம்வல்ல இறைவன் திருவருள்கொண்டு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு குளத்தடிப் பிள்ளையார் (அரசகேசரி) தேவஸ்தானத்தில் திருமாங்கல்யதாரணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி வை.கணேஷ் குடும்பத்தினர்,**
*5/2, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

**திரு.திருமதி கா.சுரேந்திரன் குடும்பத்தினர்,**
*69, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

(இரு வீட்டார் அழைப்பு)
(91469) (தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)

## முஸ்லிம் காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் -

தமக்கு எதிராக பொ.ஐ.முன்னணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு ஏதேனும் நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபித்து மூவரினதும் சார்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. பூர்வாங்க விசாரணைகளை நடத்திய நீதிபதி, பொ.ஐ.முன்னணியின் பொதுச்செயலாளர் டி.எம்.ஜயரட்ண, ஒழுங்கு நடவடிக்கைக்குழு உறுப்பினர்களான அமைச்சர்கள் நிமால் ஸ்ரீபால டி சில்வா, டபிள்யூ.டி.ஜீ.செனிவிரத்ன மற்றும் கிங்ஸ்லி விக்கிரமரட்ண ஆகியோர் சம்பந்தப்பட்ட மூவருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகளை விடுப்பதற்கும் செப்ரெம்பர் 5 ஆம் திகதிவரை இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார். (ம-உ-7)

## பொலீஸ் அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு பொலீஸ் அனுமதி வழங்கப்படவில்லை என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டதை ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவரும், ஐ.தே.கட்சியின் உப தலைவருமான காமினி அத்துக்கோறளை மறுத்துள்ளார்.

இதற்கு கருவாக்காட்டுப் பொலீஸ் நிலையத்தில் முறைப்படி அனுமதி பெறப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக, மக்கள் நாட்டின் பல பக்கங்களில் இருந்தும் கொழும்பு வருவதைத் தடுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அதற்காகவே பொய்யான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கொழும்புக்கு புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளின் அச்சுறுத்தல் கொழும்புக்கு இருப்பதால்தான் சர்வதேச காப்புறுதி நிறுவனங்கள் துறைமுகக்குள் வரும் கப்பல்களுக்கு 400 வீத காப்புறுதிக் கட்டண அதிகரிப்பை விதித்தன. இதனைத் தொடர்ந்து கொழும்பில் புலிகளின் அச்சுறுத்தல் இல்லையென அரசாங்கம் தெரிவித்தது. அத்துடன் காப்புறுதிக் கட்டண அதிகரிப்பை அகற்றுமாறு கோரி அரச அமைச்சர் காப்புறுதி நிறுவனங்களை நாடி வெளிநாடு செல்லவும் நேர்ந்தது.

இவ்வேளை, எதிரணிக் கூட்டத்துக்காக கொழும்புக்கு மக்கள் வருவதைத் தடுக்கும் நோக்குடன் அரசாங்கத் தகவல் இலாகா இப்போது வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ அறிவித்தலில் கொழும்பில் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இத்தகவல் வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் ஊடாக உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. இதனால் இந்த நாட்டின் வர்த்தகத் துறை, துறைமுகங்கள், விமானத் தளம், பொருளாதாரம் முதலான பலவற்றுக்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய பொய்யான - கீழ்த்தரமான - பிரசார வேலைகளை செய்யும் ஜனாதிபதியின் நிர்வாகமே இவற்றுக்குப் பொறுப்புச் சொல்லவேண்டும் - என்றுள்ளது. (உ-7)


சாந்திகம்
நூல் வெளியீடு
முதுமை
கைலாசபதி கலையரங்கு
26-08-2001
மாலை 3.00 மணி
(C/17970)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
அஜித், ஜோதிகா நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/17967)


### முகாமைத்துவ உதவியாளர்களுக்கான அவரச கலந்துரையாடல்

கௌரவ அமைச்சரின் ஏற்பாட்டில் மாகாணக் கல்விச் செயலாளரும் சகல கல்விப் பணிப்பாளர்களும் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதால் நாளை (24.08.2001) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அனைவரையும் புதிய உயர் கல்வி நிறுவனத்துக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- தலைவர்.

பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் சங்கம். (91433)

### முக்கிய அறிவித்தல்

இதுவரை பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெறாத (பட்டம் பெற்ற) தகுதிகாண், பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை (24-08-2001) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/ஆத்திசூடி வீதி, கலைமகள் சனசமூக நிலையத்தில் (யாழ். பல்கலைக்கழக மகளிர் விடுதிக்கு முன்பாக) ஒன்றுகூடுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

*குறிப்பு:-* அன்று வருகை தராதவர்கள் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

*பட்டதாரிகளான பயிலுநர் (தகுதிகாண்) ஆசிரியர் சங்கம்.*

- க.தயாபரன். (தலைவர்)

(91450)


வணிகக்கல்வி கருத்தரங்கு
ஆவணி 23 வியாழன் இன்று மாலை 2 மணிமுதல்
இ.செல்வநாயகம்
கொழும்பு சிங்கள மொழி வினா விடை தமிழில்.
2002 மாணவர்களும் பங்குகொள்ளலாம்
(இங்கு வழிகாட்டி நூல் விலைக்கழிவில் கிடைக்கும்)
புதிய உயர் கல்லூரி ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
(91451)


## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.23

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பாடநெறிக்கான விரிவுரையாளர்களை நியமனம் செய்வது தொடர்பான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் நடைபெறும் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று யாழ். இந்துக் கல்லூரியில் இந்த நேர்முகப் பரீட்சை [illegible] பெறமாட்டா[illegible] அறிவித்துள்ளா[illegible]. (ம-7)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான ஊடகங்கள் ஆகியவை மூலம் வெளியான தகவல்களின்படி, அந்தக் கட்சி வியாழனன்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

எதிர்ப்பு இயக்கத்தை நடத்தாமல் தடுப்பதற்கு எதுவித நோக்கமும் கிடையாது. ஆனால் ஐ.தே.கட்சி இதற்கு இதுவரை பொலீஸ் அனுமதியைப் பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி அறிவிக்கப்பட்டது முதல் வாக்கெடுப்பு நடத்தப்படும் காலம்வரைக்கும் ஊர்வலங்கள், எதிர்ப்பு இயக்கங்கள், பொதுக்கூட்டங்களை நடத்துவது சட்டவிரோதமானது ஆகும்.

வழமையான சட்டங்களின்படி எந்தவொரு கூட்டத்தை நடத்துவதற்கும் பொலீஸ் அனுமதி அவசியமாகும்.

அதேசமயம் ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், களனிதிஸ்ஸ மின்வலு நிலையம் ஆகிய முக்கிய இடங்களைத் தாக்கப்போவதாக விடுதலைப் புலிகள் அச்சுறுத்தி இருப்பது பற்றி பாதுகாப்புப் படையினருக்கு நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. இத்தகைய அபாயகரமான நிலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது பொருத்தமானதல்ல என்பதை எச்சரிக்கையாகத் தெரிவிப்பது அவசியமாகின்றது.

இத்தகைய எதிர்ப்பு இயக்கங்களில் கலந்துகொள்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளதோடு அவ்வாறு கலந்து கொள்ளும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமது நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கு உதவ நேரிடும் என்பதையும் மக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

கொழும்பு நகரின் பாதுகாப்புப் பற்றி மட்டுமல்லாமல் தேசிய பாதுகாப்புக் குறித்தும் கவனம் செலுத்துமாறும் ஐ.தே.கவிடம் கோருகிறோம் - என்றுள்ளது. (உ-7)


எமது புதிய
வீடியோ CD வெளியீடு
அஜித், ஜோதிகா நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
அலீடி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/17966)



சுனில் ஆர்ட்ஸ்
★ 17-08-2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
★ 30-08-2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ வீடியோக் கொப்பியும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்
சுனில் ஆர்ட்ஸ்
277, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
NOTE
★ CD கவருக்கான Clour Print உடன் CDயில் இருந்து CDக்கு பாடல் பதிவு செய்திட 300/= மட்டுமே.
★ Digital Audio CD, Normal Audio CDகள் மற்றும் Tamil, MP3 CDகளும் குறைந்த கட்டணத்தில் பதிவு செய்துதரப்படும்
★ Computerற்கான உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.


## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் செய்த 5முஸ்லிம்களும் ஒரு தமிழரும் ஒரு சிங்களவரும் படுகாயமடைந்து நிலாவெளி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்-

மற்றும் ஆறு தமிழர்களும் இரு முஸ்லிம்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாகவும் -

விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இறக்கக்கண்டிக்கு அப்பால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கான அரசமைப்புத் திருத்தத்தை உடன் கொண்டுவருதல் வேண்டும்.

★ குறுகிய காலத்துக்கு தேசிய அரசு ஒன்றை அமைத்து அதன்கீழ் பொதுத்தேர்தலை உடன் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

- ஆகிய நான்கு விடயங்களும் முன்நிபந்தனைகளாகக் குறிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுகி[illegible]து.

இந்த முன் நிபந்தனைக[illegible] ஏற்று இணக்கப்பாட்டுக்கு வர அரசுத் தரப்பு பெரும்பாலும் சம்மதிக்கும் என்ற பரவலான நம்பிக்கை, ஐ.தே.கட்சித் தரப்பில் இருப்பதால், இக்கடிதத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து எதுவும் குறிப்பிடுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்த பிரசாரம் குறித்து ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவித்து உத்தியோகபூர்வ குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் -

அந்தக் குழுவுடன் மட்டுமே ஐ.தே.கட்சியால் இது தொடர்பாக நியமிக்கப்படும் குழு பேச்சு நடத்தும் என்றும் -

அக்கடிதத்தில் குறிப்பிடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது இது தொடர்பான பிரதமரின் அழைப்பை அரசின் உத்தியோகபூர்வ அழைப்பாக ஏற்க இயலாது என்பதை மறைமுகமான வழியில் தனது பதில் கடிதத்தில் ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டும் என்று கூறப்படுகின்றது. (உ-7)

## அனுரா இன்று வருகிறார்

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா இன்று நாடு திரும்புகிறார்.

கலிபோர்னியாவில் தங்கி உள்ள சபாநாயகர் ஹொங்கொங் ஊடாக இன்று நாடு திரும்புவார் என்று சபாநாயகர் அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (ம)

## அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள இராணுவத்தினர் மற்றும் பொலீஸாருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவும், பதில் மனுத் தாக்கல் செய்யுமாறு பணிக்கவும் உத்தரவிட்டனர்.

விசாரணை ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி இரு மனுதாரர்களையும் பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெறவும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி மனுதாரர்கள் சார்பில் ஆஜரானார்.

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் சர்வஜன வாக்கெடுப்புக்கான திகதி அறிவித்தமை.

★ நாடாளுமன்றத்தை ஒத்தி[illegible] எதிர்க்கட்சிகள் இணைந்து [illegible]திய ஆர்ப்பாட்டத்தை தடைசெய்தமை.

★ அந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸாரால் இருவர் தாக்கிக் கொல்லப்பட்டமை - என்பனவே அந்தக் குற்றச்சாட்டுக்களாகும்.

இந்தக் குற்றப்பிரேரணையை ஐ.தே.கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலைகள் கொழும்பு விலைகளை விடப் பலமடங்கு அதிகமாக இருப்பதாகவும் -

இதற்கு பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே பொறுப்பு என்றும் -

இதனால் அவர் மீதான குற்றப் பிரேரணையில் இந்த விடயமும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டிருந்தது. எனினும் ஐ.தே.கட்சி தனது குற்றப்பிரேரணையில் இந்த விடயத்தைச் சேர்த்துக்கொள்ளவில்லை. (ய)

### கிறீஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம்

சுன்னாகம் (C.I.S.R.S)

**கருத்தரங்கு**

*தலைப்பு* : 'தமிழிசை நேற்றும் இன்றும்'
*தலைமை* : அருட்திரு.எ.எ.போல்
*(யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர்)*
*கருத்துரை வழங்குபவர்* : "அருட்கலைஞர் சங்கீதவித்வான்"
அருள்திரு.ம.கருணாகரன்.
*இசைப்பேராசிரியர்.*
*தமிழ்நாடு இறையியல் கல்லூரி*
*அரசடி, மதுரை -16*

இடம் : கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.
காலம் : நாளை (24.08.2001) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 (புதிய நேரம்)
ஆசியுரை : அறிவர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
*(தென்னிந்தியத் திருச்சபை பேராயர்)*

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**C.I.S.R.S நிறுவனத்தினர்.**

*குறிப்பு: நுண்கலைப்பீட மாணவர்களுக்கு உகந்தது.* (91454)

### மரண அறிவித்தல்

**செல்லையா தியாகராசா**

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா தியாகராசா நேற்று (22-08-2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் பவளராணியின் அன்புக் கணவரும், ஜெயதேவி (பிரான்ஸ்), சத்தியதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார், செந்தில்குமார் (பிரான்ஸ்), ஜாமளாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலநாதன் (பிரான்ஸ்), தனபாலச்சந்திரன் (பிரான்ஸ்), மோகனராஜகுமார் (வலி.மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாத், பிறேமினி, பிரதீபன், சஞ்சீவன், சிந்து, கேவின் (அனைவரும் பிரான்ஸ்), நிரந்தரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாலாவோடை, உடுவில் தெற்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
க. மோகனராஜகுமார்
*(வலி.மேற்கு பிரதேச சபை)*

(91470)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.